ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2165 - 2020 පෙබරවාරි මස 28 වැනි සිකුරාදා - 2020.02.28

*2165 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *312* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *356* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, மாச்சு மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ்

*உதவிச் சேவை உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பெண் உப பொலிஸ் பரிசோதகர் (கதிரியக்க வல்லுநர்/ மருந்தாளர்/மின்சார இருதய துடிப்பு தொழில்நுட்பவியலாளர்/பௌதீக சிகிச்சையாளர்/மருத்துவ ஆய்வுக்கூட தொழல்நுட்பவியலாளர்) பதவிகள்*

*இலங்கை பொலிஸின் உதவிச் சேவை பயிலுநர் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பயிலுநர் பெண் உப பொலிஸ் பரிசோதகர் (கதிரியக்க வல்லுநர்/மருந்தாளர்/மின்சார இருதய துடிப்பு தொழில்நுட்பவியலாளர்/பௌதீக சிகிச்சையாளர்/மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்) பதவிகளுக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*2. பின்வரும் படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை "பணிப்பாளர்/ஆட்சேர்ப்பு, பயிலுநர்களின் ஆட்சேர்ப்பு பிரிவு, இலக்கம் 375, முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு, அதனை பதிவுத் தபாலில் 2020.04.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மேற்குறித்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.*

*3. **சம்பள அளவுத் திட்டம்**.- ரூபா 3,93,480 - 7 × 4,440 - 2 × 5,940 - 25 × 7,920 - ரூபா 6,34,440.00*

*பொது நிர்வாக சுற்றறிக்கையின் இலக்கம் 3/2016 இன் பிரகாரம் சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.*

*மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை இலக்கம் 2416/ 2013 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கும் உரிமை பெறுவார்கள். மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக பின்வரும் கொடுப்பனவுகள் அவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.*

- *(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : ரூபா 7,800 ;*
- *(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படை சம்பளத்தில் 40% கொடுப்பனவாக குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் ரூபா 13,116.00*
- *(இ) இடைக்கால கொடுப்பனவு ரூபா 2,500 ;*
- *(ஈ) கடினக் கொடுப்பனவுகள் : ரூபா 2,000 ;*
- *(உ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ;*
- *(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 12,000.00 (அதி கூடிய விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்)*
- *(எ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 11,200.00 (அதி கூடிய விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்)*

**இக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

- (i) *இலவசப் பயண வசதிகள் ;*
- (ii) *உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதிகள் (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்) ;*
- (iii) *குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் கிடைத்தல் ;*
- (iv) *அனைத்து சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;*
- (v) *தனது விளையாட்டுத் திறமை மற்றும் இயல்பான திறமைகளை மேம்படுத்திக் கொள்ளும் வசதிகள் ;*
- (vi) *கடமைகளுக்காக பிரயாணச் செலவுகளும் கஷ்டப் பிரதேச சேவை மற்றும் விசேட கடமைகளுக்காக பரிசாக பணத்தொகையும் வழங்கப்படும்.*
- (vii) *திறமைகளின் படி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாடநெறிகளைக் கற்பதற்கான வாய்ப்புக்கள் உரித்தாகும்.*

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

*(அ) **வயதெல்லை**.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயதெல்லை 18-30 வயதிற்கு இடையில் இருத்தல் வேண்டும். எனினும், மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்கையில் தற்போது பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான அதிகபட்ச வயதெல்லை 35 ஆகும்.*

**உதவிச் சேவை பொலிஸ் பரிசோதகர் (கதிரியக்க வல்லுநர்) மற்றும் உதவிச் சேவை பெண் உப பொலிஸ் பரிசோதகர் கதிரியக்க வல்லுநர் பதவிக்காக.**

(ஆ) **கல்வித் தகைமைகள்.-**

* க.பொ.த. (உயர்தர) பரீட்சையால் பௌதீகவியல் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய, விஞ்ஞானம் மற்றும் இணைந்த கணிதம் போன்ற பாடங்களுள் 02 விடயங்கள் அடங்கலாக ஒரே முறையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

* க.பொ.த.(சா.தர) பரீட்சையில் சிங்களம் /தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்காக 04 திறமைச் சித்திகளுடன் ஒரே முறையில் ஆங்கில மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

* இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் கதிரியக்க வல்லுநர் பட்டத்தைப் பெற்று இலங்கை மருத்துவச் சபையில் பூரண பதிவைப் பெற்றிருத்தல்.

அல்லது

* இலங்கை மருத்துவச் சபையில் தற்போது முழு நேர பதிவாகிய கதிரியக்க வல்லுநராகுதல்.

**குறிப்பு 01.-** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்பாட்டிற்கமைய பாட இலக்கம் 41, 44 கொண்ட இரு விஞ்ஞானம் பாடங்களை ஒரு பாடமாகவும், இலக்கம் 42 மற்றும் இலக்கம் 45 ஐக் கொண்ட இரு கணித பாடங்களை ஒரு பாடமாகவும் கருதி பரீட்சையில் சித்தியடைந்த பாட எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

**02.-** க. பொ. த. (சா. தர) பரீட்சையில் தொழில்நுட்பப் பாட எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடையாமையானது அப்பாடத்தின் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பினும் அப்பாடத்தில் சித்தியடையவில்லை என்றே கருதப்படும்.

**03.-** விருப்பத்துக்குரிய பாடங்களான தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடப்பிரிவுக்குள் உள்ளடங்காத காரணத்தினால் அப்பாடங்களில் சித்தியடைதலானது க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடமாகக் கருதப்படமாட்டாது.

(இ) **தொழிற் தகைமைகள் :**

* சுகாதார அமைச்சில் கதிரியக்க வல்லுநர் 02 ஆண்டுகளாக பயிற்சி கற்கைநெறியை கற்று, டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும் இலங்கை மருத்துவச் சபையில் பூரணப் பதிவைப் பெற்றிருத்தல்.

அல்லது

* இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் கதிரியக்க வல்லுநர் பட்டத்தைப் பெற்று இலங்கை மருத்துவச் சபையின் பூரணப் பதிவைப் பெற்றிருத்தல்,

**குறிப்பு.-** க. பொ. த. (உயர் தர) மற்றும் க. பொ. த. (சா. தர) கல்வித் தகைமைகளினால் ஆட்சேர்ப்புச் செய்து மருந்தாளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் பரீட்சார்த்திகளுக்காக தொழிற் தகைமைகள் ஏற்புடையதாகாது.

(ஈ) **அனுபவம் :**

க. பொ. த. (உயர் தர) மற்றும் க. பொ. த. (சா. தர) கல்வித் தகைமைகளினால் ஆட்சேர்ப்புச் செய்து மருந்தாளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் பரீட்சார்த்திகளுக்காக தொழிற் தகைமைகள் ஏற்புடையதாகாது.

**உதவிச் சேவை பொலிஸ் பரிசோதகர் (மருந்தாளர்) மற்றும் உதவிச் சேவை பெண் உப பொலிஸ் பரிசோதகர் (மருந்தாளர்) பதவிக்காக.**

(ஆ) **கல்வித் தகைமை.-**

* க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் இரசாயனவியல் பாடம் அடங்கலாக இணைந்த கணிதம், பௌதீகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களுள் 03 பாடங்களில் ஒரே முறையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

* க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்காக 04 திறமைச் சித்திகளுடன் ஒரே முறையில் ஆங்கில மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

* இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் மருந்தாளர் பட்டத்தைப் பெற்று இலங்கை மருத்துவச் சபையில் பூரண பதிவைப் பெற்றிருத்தல்.

அல்லது

* இலங்கை மருத்துவச் சபையின் தற்போது முழு நேரப் பதிவைப் பெற்று மருந்தாளராக செயற்படும் உள்ளக அல்லது வெளியக கற்கை மேற்கொள்கின்ற மருந்தாளர் ஆதல்.

**குறிப்பு**.- 1. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்பாட்டிற்கமைய பாட இலக்கம் 41, 44 கொண்ட இரு விஞ்ஞான பாடங்களை ஒரு பாடமாகவும், இலக்கம் 42 மற்றும் இலக்கம் 45 ஐக் கொண்ட இரு கணித பாடங்களை ஒரு பாடமாகவும் கருதி பரீட்சையில் சித்தியடைந்த பாட எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

2. க. பொ. த. (சா. தர) பரீட்சையில் தொழில்நுட்ப பாட எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையாமையானது அப்பாடத்தின் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பினும் அப்பாடத்தில் சித்தியடையவில்லை என்றே கருதப்படும்.

3. விருப்பத்திற்குரிய பாடங்களான தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடப்பிரிவுக்குள் உள்ளடங்காத காரணத்தினால் அப்பாடங்களில் சித்தியடைதலானது க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடமாகக் கருதப்படமாட்டாது.

(இ) **தொழிற் தகைமைகள்.-**

* மருத்துவ சபையினால் நடாத்தப்படும் வெளியக மருந்தாளர் பரீட்சையில் சித்தியடைதல் மருத்துவ சபையில் உள்ளக மருந்தாளர் பரீட்சையில் சித்தியடைந்து ஓராண்டு காலம் வதிவிட பயிற்சியைப் பெற்று இலங்கை மருத்துவ சபையில் மருந்தாளராக பதிவாகியிருத்தல்.

அல்லது

* இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் மருந்தாளர் பட்டத்தைப் பெற்று இலங்கை மருத்துவச் சபையில் பூரண பதிவைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- க. பொ. த. (உயர் தரம்) மற்றும் க. பொ. த. (சா.தர) கல்வித் தகைமைகளினால் ஆட்சேர்ப்புச் செய்து மருந்தாளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் பரீட்சார்த்திகளுக்கு தொழிற் தகைமைகள் பொருந்தாது.

(ஈ) **அனுபவம்.-**

* சுகாதார அமைச்சில் அல்லது சுகாதார அமைச்சில் பதிவு செய்துள்ள நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் 06 மாதங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- க. பொ. த. (உயர் தரம்) மற்றும் க. பொ. த. (சா./தர) கல்வித் தகைமைகளினால் ஆட்சேர்ப்புச் செய்து மருந்தாளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் பரீட்சார்த்திகளுக்கு தொழிற் தகைமைகள் ஏற்படையதாகாது.

**உதவிச் சேவை உப பொலிஸ் பரிசோதகர் (மின்சார இருதய துடிப்பு தொழில்நுட்பவியலாளர்) மற்றும் உதவிச் சேவை பெண் உப பொலிஸ் பரிசோதகர் (மின்சார இருதய துடிப்பு தொழில்நுட்பவியலாளர்) பதவிக்காக.**

(ஆ) **கல்வித் தகைமை.**-

* க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் உயிரியல் பாடத்துக்கு திறமை சித்தியுடன் இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்கள் அடங்கலாக 02 பாடங்கள் உட்பட ஒரே முறையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

* க. பொ. த. (சா. /தர) பரீட்சையில் சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்காக 04 திறமைச் சித்திகளுடன் ஒரே முறையில் ஆங்கில மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

* மின்சார இருதய துடிப்பு தொழில்நுட்பவியலாளர் டிப்ளோமா சான்றிதழைப் பெற்று இலங்கை மருத்துவச் சபையில் பூரண பதிவைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- 1. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்பாட்டிற்கமைய பாட இலக்கம் 41, 44 கொண்ட இரு விஞ்ஞான பாடங்களை ஒரு பாடமாகவும், இலக்கம் 42 மற்றும் இலக்கம் 45 ஐக் கொண்ட இரு கணிதப் பாடங்களை ஒரு பாடமாகவும் கருதி பரீட்சையில் சித்தியடைந்த பாட எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

2. க. பொ. த. (சா. தர) பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையாமையானது அப்பாடத்தின் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பினும் அப்பாடத்தில் சித்தியடையவில்லை என்றே கருதப்படும்.

3. விருப்பத்திற்குரிய பாடங்களான தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடப்பிரிவுக்குள் உள்ளடங்காத காரணத்தினால் அப்பாடங்களில் சித்தியடைதலானது க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடமாகக் கருதப்படமாட்டாது.

(இ) **தொழிற் தகைமைகள்.**-

* சுகாதார அமைச்சில் மின்சார இருதய துடிப்பு தொழில்நுட்பவியலாளர் ஓராண்டு அல்லது சுகாதார அமைச்சின் நவீனப்படுத்திய சுற்றறிக்கையின் படி பயிற்சிக் காலவெல்லைக்குள் பயிற்சிப் பாடநெறியை கற்று, டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும் இலங்கை மருத்துவச் சபையில் பூரணப் பதிவைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- க. பொ. த. (உயர் /தரம்) மற்றும் க. பொ. த. (சா./தர) கல்வித் தகைமைகளினால் ஆட்சேர்ப்புச் செய்து மின்சார இருதய துடிப்பு தொழில்நுட்பவியலாளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் பரீட்சார்த்திகளுக்கு தொழிற் தகைமைகள் ஏற்புடையதாகாது.

(ஈ) **அனுபவம்.**-

* சுகாதார அமைச்சில் பதிவு செய்துள்ள நிறுவனத்தினால் தொடர்புடைய துறையில் 06 மாதத்திற்கு குறையாத அனுபவமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- க. பொ. த. (உயர் /தரம்) மற்றும் க. பொ. த. (சா./தர) கல்வித் தகைமைகளினால் ஆட்சேர்ப்புச் செய்து மின்சார இருதய துடிப்பு தொழில்நுட்பவியலாளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் பரீட்சார்த்திகளுக்கு தொழிற் தகைமைகள் ஏற்புடையதாகாது.

**உதவி சேவை பொலிஸ் பரிசோதகர் (பௌதீக சிகிச்சையாளர்) மற்றும் உதவிச் சேவை பெண் உப பொலிஸ் பரிசோதகர் (பௌதீக சிகிச்சையாளர்) பதவிக்காக.**

(ஆ) **கல்வித் தகைமை.**-

* க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் பௌதீகவியல் பாடத்துக்கு திறமை சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், இணைந்த கணிதம் மற்றும் விவசாய, விஞ்ஞானம், ஆகிய பாடங்களுள் 02 பாடங்கள் உட்பட ஒரே முறையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

* க. பொ. த. (சா/ தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்காக 04 திறமைச் சித்திகளுடன் ஒரே முறையில் ஆங்கில மொழி உட்பட 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

* சுகாதார அமைச்சினால் பௌதீக சிகிச்சையாளர் மற்றும் தொழில் சிகிச்சைக் கல்லூரியினால் நடாத்தப்படும் 02 ஆண்டுகள் பூரண கால பாடநெறியை கற்று அதில் சித்தியடைந்து இலங்கை மருத்துவச் சபையின் பூரண பதிவைப் பெற்றிருத்தல்.

அல்லது

* இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பௌதீக சிசிச்சையாளர் பட்டத்தைப் பெற்று இலங்கை மருத்துவச் சபையில் பூரண பதிவைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- 1. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்பாட்டிற்கமைய பாட இலக்கம் 41, 44 கொண்ட இரு விஞ்ஞான பாடங்களை ஒரு பாடமாகவும், இலக்கம் 42 மற்றும் இலக்கம் 45 ஐக் கொண்ட இரு கணிதப் பாடங்களை ஒரு பாடமாகவும் கருதி பரீட்சையில் சித்தியடைந்த பாட எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

2. க. பொ. த. (சா. தர) பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தை எழுத்திலான பரீட்சையில் சித்தியடையாமையானது அப்பாடத்தின் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பினும் அப்பாடத்தில் சித்தியடையவில்லை என்றே கருதப்படும்.

3. விருப்பத்திற்குரிய பாடங்களான தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடப்பிரிவுக்குள் உள்ளடங்காத காரணத்தினால் அப்பாடங்களில் சித்தியடைதலானது க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடமாகக் கருதப்படமாட்டாது.

(இ) **தொழிற் தகைமைகள்**.-

* சுகாதார அமைச்சினால் பௌதீக சிகிச்சையாளர் மற்றும் தொழில் சிகிச்சைக் கல்லூரியினால் நடாத்தப்படும் 02 ஆண்டுகள் பூரண கால பாடநெறியைக் கற்று அதில் சித்தியடைந்து இலங்கை மருத்துவச் சபையின் பூரணக் காலப் பதிவைப் பெற்றிருத்தல்.

அல்லது

* இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பௌதீக சிசிச்சையாளர் பட்டத்தைப் பெற்று இலங்கை மருத்துவச் சபையில் பூரண பதிவைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- க. பொ. த. (உயர் /தரம்) மற்றும் க. பொ. த. (சா/தர) கல்வித் தகைமைகளினால் ஆட்சேர்ப்புச் செய்து பௌதீக சிகிச்சையாளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் பரீட்சார்த்திகளுக்கு தொழிற் தகைமைகள் ஏற்புடையதாகாது.

(ஈ) **அனுபவம்**.-

* சுகாதார அமைச்சில் பதிவு செய்துள்ள நிறுவனத்தினால் தொடர்புடைய துறையில் 06 மாதத்திற்கு குறையாத அனுபவமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- க. பொ. த. (உயர்/ தரம்) மற்றும் க. பொ. த. (சா/ தர) கல்வித் தகைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்து பௌதீக சிகிச்சையாளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் பரீட்சார்த்திகளுக்கு தொழில் அனுபவக் காலம் ஏற்புடையதன்று.

**உதவிச் சேவை உப பொலிஸ் பரிசோதகர் (மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர்) மற்றும் உதவிச் சேவை பெண் உப பொலிஸ் பரிசோதகர் (மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர்) பதவிக்காக.**

(ஆ) **கல்வித் தகைமை**.-

* க. பொ. த. (உயர் / தர) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்துக்கு திறமை சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல்,பௌதீகவியல் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களுள் 03 பாடங்கள் ஒரே முறையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

* க. பொ. த. (சா/தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில மொழி உட்பட 04 திறமைச் சித்திகளுடன் பாடங்கள் ஒரே முறையால் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**குறிப்பு**.- *1. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்பாட்டிற்கமைய பாட இலக்கம் 41, 44 கொண்ட இரு விஞ்ஞான பாடங்களை ஒரு பாடமாகவும், இலக்கம் 42 மற்றும் இலக்கம் 45 ஐக் கொண்ட இரு கணிதப் பாடங்களை ஒரு பாடமாகவும் கருதி பரீட்சையில் சித்தியடைந்த பாட எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.*

*2. க. பொ. த. (சா. தர) பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தை எழுத்திலான பரீட்சையில் சித்தியடையாமையானது அப்பாடத்தின் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பினும் அப்பாடத்தில் சித்தியடையவில்லை என்றே கருதப்படும்.*

*3. விருப்பத்திற்குரிய பாடங்களான தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடப்பிரிவுக்குள் உள்ளடங்காத காரணத்தினால் அப்பாடங்களில் சித்தியடைதலானது க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடமாகக் கருதப்படமாட்டாது.*

(இ) **தொழிற் தகைமைகள்**.-

* *சுகாதார அமைச்சில் பயிற்சி பாடசாலையொன்றில் மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்ப விடயங்களுக்கு ஏற்புடையதாக நடாத்தப்படும் பாடநெறியை கற்று 02 ஆண்டு காலமாக டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் இலங்கை மருத்துவச் சபையின் பூரணக் கால பதிவைப் பெற்றிருத்தல்*

*அல்லது*

* *இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பட்டத்தைப் பெற்று இலங்கை மருத்துவச் சபையில் பூரண பதிவைப் பெற்றிருத்தல்.*

**குறிப்பு**.- *க. பொ. த. (உயர் /தரம்) மற்றும் க. பொ. த. (சா/தர) கல்வித் தகைமைகளினால் ஆட்சேர்ப்புச் செய்து மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பவியலாளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கும் பரீட்சார்த்திகளுக்கு தொழிற் தகைமைகள் ஏற்புடையதாகாது.*

(ஈ) **அனுபவம்**.-

* *சுகாதார அமைச்சில் அல்லது சுகாதார அமைச்சில் பதிவு செய்துள்ள நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் 06 மாதங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.*

* *க. பொ. த. (உயர் தர) மற்றும் க. பொ. த. (சா/ தர) கல்வித் தகைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்த மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பவியலாளர் பயிற்சிக்காகத் தெரிவுசெய்வதற்கு எதிர்பார்க்கும் பரீட்சார்த்திகளுக்கு தொழில் அனுபவக் காலம் ஏற்புடையதன்று.*

(உ) **உடற் தகைமைகள் :**

**ஆண்**

* *உயரம் : 05 அடி 06 அங்குலத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.*

* *மார்பளவு : 32 அங்குலத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். (மூச்சை உள்ளெடுக்காது)*

**பெண்**

* *உயரம் : 05 அடி 04 அங்குலத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.*

* *மார்பளவு ஏற்புடையதன்று*

**குறிப்பு**.- *விசேட தகைமைகள் மற்றும் தேர்ச்சிகளுடனான விண்ணப்பதாரிகள் தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின் படி இவ் உயர் எல்லைகள் மற்றும் மார்பளவு எல்லைகள் குறையலாம்.*

(ஊ) **பார்வைப் பற்றிய தேவைப்பாடுகள்**.- *ஒரு கண்ணின் பார்வை 6/12 இற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். பார்வையானது ஒரு கண்ணில் 6/6 மற்றும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆக இருப்பின் அதுவும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும்.*

(எ) **வேறு தகைமைகள்**.-

(i) *இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.*

(ii) *விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸ் துறை எதிர்பார்க்கின்ற சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

(iii) *திருமணமாகாத ஆண்களாக/ பெண்களாக இருத்தல் வேண்டும். (விவாகரத்தானவர்கள் மற்றும் விதவைகள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்) பொலிஸ் சேவையில் அல்லது விண்ணப்பங்கள் கோரியுள்ள பதவிகளுக்கு ஏற்புடையதாக சேவையில் தற்போதும் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது பொருந்தாது.*

(iv) நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குக் கட்டுப்படல் வேண்டும்.

(v) செயற்கையான உடல் மாற்றங்கள் செய்யப்பட்டிருத்தலாகாது (உ-ம் - பச்சைக் குத்தியிருத்தல்)

(vi) பதவியின் ஆட்சேர்ப்புக்குத் தேவையான 4 (அ) முதல் 4 (எ) வரை தகைமைகள் விண்ணப்பப்படிவங்களைக் கோரும் அறிவித்தலில் / வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்ட திகதியன்று எல்லாவகையிலும் பூர்த்திச் செய்திருத்தல் வேண்டும்.

(ஏ) **உடற்தகைமைகள்.-** அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை.-**

5.1 முதற்கட்டத் தேர்வு

விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுள் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே முதற்கட்டத் தேர்விற்கு அழைக்கப்படுவர். அத்தேர்வின் போது மேற்குறித்த 4(அ) முதல் 4 (எ) வரையிலான தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

5.2 **உடல் உறுதித் தேர்வு** : பொலிஸ் மா அதிபரால் நியமிக்கப்படும் ஒரு குழுமத்தின் மூலம் விண்ணப்பதாரிகள் உடல் உறுதித் தேர்விற்கு உட்படுத்தப்படுவர்.

5.3 இப்பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரமே கட்டமைப்பு முறையிலான பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

5.4 கட்டமைப்பு முறையிலான பரீட்சை (தொழிற் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள்/பொலிஸ் உப சேவையில் ஆட்சேர்ப்பிற்கு)

**உதவிச் சேவை உப பொலிஸ் பரிசோதகர்/பெண் உப பொலிஸ் பரிசோதகர் (கதிரியக்க வல்லுநர் மற்றும் மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பவியலாளர்) பதவிக்காக**

கட்டமைப்பு முறையிலான பரீட்சை நடைபெறும் போது தகைமைகளும் பரிசீலிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | அதிகபட்சப் புள்ளிகள் | தேர்வு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01. தொழிற் தகைமைகள் :<br>இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் கதிரியக்க வல்லுநர்/ மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பவியலாளர் பட்டமொன்றை பெற்றிருத்தல் அல்லது சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கதிரியக்க வல்லுநர்/ மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பவியலாளர் டிப்ளோமாவைப் பெற்று, இலங்கை மருத்துவச் சபையில் பூரணப் பதிவைப் பெற்றிருத்தல் | 40 | ஏற்புடையதன்று |
| 02. சேவை அனுபவம் :<br>சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சுகாதார நிறுவனத்தில் சேவை அனுபவம் (ஒரு வருடத்திற்கு 04 புள்ளிகள்) | 20 | |
| 03. மொழி அறிவு/கணினி ஆற்றல் /வேறு | 10 | |
| 04. விளையாட்டுத் திறன் | 10 | |
| 05. தலைமைத்துவம்/சமூக சேவைகள் | 10 | |
| 06. நேர்முகப் பரீட்சைக் குழுமத்தின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | 40% |

**உதவிச் சேவை உப பொலிஸ் பரிசோதகர்/பெண் உப பொலிஸ் பரிசோதகர் (மருந்தாளர்/மின்சார இருதய துடிப்பு தொழில்நுட்பவியலாளர்/பௌதீக சிகிச்சையாளர்) பதவிக்காக**

கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சை நடைபெறும் போது தகைமைகளும் பரிசீலிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | அதிகபட்சப் புள்ளிகள் | தேர்வு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01. பதவிக்கேற்ற சேவை அனுபவம் (ஒரு வருடத்திற்கு 06 புள்ளிகளாக அதிகபட்சப் புள்ளிகள் 30) | 30 | ஏற்புடையதன்று |
| 02. மொழி அறிவு/கணினி திறன் /வேறு | 25 | |
| 04. விளையாட்டுத் திறன் | 10 | |
| 05. தலைமைத்துவம்/சமூக சேவைகள் நேர்முகப் பரீட்சைக் குழுமத்தின் மதிப்பீடு | 25 | |
| 06. நேர்முகப் பரீட்சைக் குழுமத்தின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | 40% |

5.5 கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சை (தொழிற் தகைமையைப் பெறாத விண்ணப்பதாரிகளின் ஆட்சேர்ப்புக்காக)

கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சை நடைபெறும் போது தகைமைகளும் பரிசீலிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | அதிகபட்சப் புள்ளிகள் | தேர்வு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01. மொழி அறிவு/கணினித் திறன்/வேறு | 30 | ஏற்புடையதன்று |
| 02. விளையாட்டுத் திறன் | 30 | |
| 03. தலைமைத்துவம்/சமூக சேவைகள் நேர்முகப் பரீட்சைக் குழுமத்தின் மதிப்பீடு | 30 | |
| 04. நேர்முகப் பரீட்சைக் குழுமத்தின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | 40% |

5.6 கட்டமைப்பு முறையிலான நேர்முகப்பரீட்சைக் குழுமத்தை நியமிக்கும் அதிகாரி - நியமன அதிகாரி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

5.7 ஆரம்ப பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதோடு, அதில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

5.8 எழுத்துப் பரீட்சை (பொலிஸ் உப சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு பொருந்தாது.)

| பாடங்கள் | அதிகபட்ச மதிப்பெண்கள் | சித்தியடையத் தேவையான மதிப்பெண்கள் |
|---|---|---|
| 01. கிரகித்தல் மற்றும் மொழித்திறன் | 100 | 40% |
| 02. பொது உளச்சார்பு பரீட்சை | 100 | 40% |
| 03. சுகாதார துறைக்குரிய பொது அறிவு | 100 | 40% |

5.9 பரீட்சையை நடாத்தும் அதிகாரி
நியமன அதிகாரி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தர்.

5.10 கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மதிப்பெண்களை எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மதிப்பெண்களோடு சேர்த்து விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் மொத்த மதிப்பெண்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

5.11 விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு பெற்றுக்கொண்ட மொத்த மதிப்பெண்களின் எண்ணிக்கையின் ஒழுங்கு முறைப்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

6. **பின்னணிப் பரீட்சை.-**

6.1 மேற்குறித்த 5.11 ஆம் பந்திக்கமைவாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகளின் நன்னடத்தையை உறுதிப்படுத்துவதற்காக பின்னணிப் பரீட்சை நடாத்தப்படும்.

**குறிப்பு**:- நெருங்கிய உறவினர்கள் தொடர்பில் எவ்வித குற்ற அறிக்கைகளும் இருத்தலாகாது. நெருங்கிய உறவினர்கள் எனும் போது விண்ணப்பதாரியின் தாய், தந்தை, பாதுகாவலர், சகோதர, சகோதரிகள் மற்றும் சகோதர, சகோதரிகள் விவாகமானவர்கள் எனில் வாழ்க்கைத் துணை ஆகியோர் நெருங்கிய உறவினர்களாகக் கருதப்படுவர்.

6.2 விண்ணப்பதாரியின் நன்னடத்தையை உறுதிப்படுத்துவதற்காக அவர் மற்றும் அவரின் நெருங்கிய உறவினர்களினதும் அவர் நெருங்கிப் பழகுவோர்களினதும் நன்னடத்தைத் தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்படுவதோடு மோசமான பின்னணி அறிக்கையுடனான விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படமாட்டார்கள்.

6.3 ஆட்சேர்க்கப்படும் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குவதனால் அவர் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமையற்றவராவர். பொய்யான தகவல்களை வழங்கியமை தொடர்பாக ஆட்சேர்ப்பின் பின்னர் தெரிய வந்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

6.4 திறன் மதிப்பெண்களின் பட்டியல் படி ஆட்சேர்ப்புச் செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் விண்ணப்பதாரிகளின் பின்னணி அறிக்கைகள் கிடைக்கும் வரை அவர் மருத்துவப் பரீட்சைக்காக அழைக்கப்படமாட்டார்.

7. **மருத்துவப் பரிசோதனை.-** மருத்துவப் பரிசோதனைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பொலிஸ் வைத்திய சாலையின் பிரதான மருத்துவ உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மேலும் இங்கு விண்ணப்பதாரிகள் பொலிஸ் வைத்தியசாலையின் கடமைகளுக்குத் தகைமையுடையவர்கள் என உடல் மற்றும் உளத் தகைமைப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவார்கள். பிரதான மருத்துவ உத்தியோகத்தர் மருத்துவப் பரிசோதனையின் அறிக்கைகளை 169 சுகாதார படிவத்தின் கீழ் சமர்ப்பித்தல் வேண்டும். மருத்துவப் பரிசோதனைக்காக ஒரு முறை மாத்திரமே உட்படுத்தப்படமுடியும்.

8. **பயிற்சி.-**

8.1 கட்டாய ஆட்சேர்ப்பு
பின்னணிப் பரீட்சையில் மற்றும் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் பொலிஸ் மா அதிபரால் நிர்ணயிக்கப்படும் ஒரு தினத்தில் 12 வார அடிப்படைப் பொலிஸ் பயிற்சிக்காக அழைக்கப்படுவார்கள்.

8.2 தொழிற் தகைமைகளைப் பெறாத விண்ணப்பதாரிகள் அடிப்படைப் பயிற்சியின் பின்னர் இத்தொழிலுக்காக சுகாதார அமைச்சில் நடாத்தப்படும் 03 வருட தொழிற் பயிற்சிப் பாடநெறிக்காக ஈடுபடுத்தப்படுவார்கள்.

8.3 சுகாதார அமைச்சில் பதவிக்கு ஏற்புடைத்தான முழுநேர தொழிற் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களின் நியமனத்தை உறுதிப்படுத்தலானது தொழிற் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வரை இடைநிறுத்தப்படும். அதேபோன்று பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யாத அல்லது இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வழங்குகின்ற 03 தடவைகளிலும் சித்தியடையாத உத்தியோகத்தர்களின் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

09. **சேவை நிபந்தனைகள்.-**

(1) சான்றிதழ்களைப் பெற்ற அல்லது பெறாத கட்டாயமாக ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் உத்தியோகத்தர்களை 03 வருட தகுதிகூர்/பயிலுநர் காலத்திற்கும், மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் தொழிற் பாடநெறியின் பின்னர் ஒரு வருட பதிற்கடமை காலத்திற்கும் உட்படுவர். (பொலிஸ் உப சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதன்று) பயிலுநர் காலப்பகுதியில் திருமணம் செய்வதாயின் பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(2) க. பொ. த. (உயர் தர) பெறுபேறுகளின்படி கட்டாய ஆட்சேர்ப்பு செய்யும் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொழிற்பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வரை குறித்த பதவியில் நிரந்தரமாக்குதல் இடைநிறுத்தப்படும். மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள்

தொழிற்பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்திச் செய்வதற்கு முடியாமல் போனால் காலத்திற்கேற்றவாறு முன்பு இருந்த பதவியில் ஈடுபடுத்தப்படுவார்கள். (பொலிஸ் உதவிச்சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தாது.)

(3) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள மற்றும் இதனகத்துப் பின்னர் அது தொடர்பாக விதிக்கப்படும் கட்டளைகள் இருப்பின் அவற்றிற்கும் ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். (பொலிஸ் உப சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தாது.)

(4) தாபன விதிக்கோவை ஏற்பாடு, நிதி ஒழுங்குவிதிகள், தேசிய பொலிஸ் ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மற்றும் ஏற்பாடுகள், அரச சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், திறைசேரி சுற்றறிக்கைகள், பொலிஸ் கட்டளைகள், பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் அறிவுறுத்தற் கோவைகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(5) க. பொ. த. உயர் தர தகைமைகளின்படி கட்டாயமாக ஆட்சேர்க்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்க்கும் உத்தியோகத்தர்கள் தொழில்சார் பயிற்சியை இறுதியடைவதின் பின்னர் தொழிற் சான்றிதழ் மற்றும் இலங்கை மருத்துவச் சபையில் பதிவைப் பெற்ற திகதி முதல் 15 வருட கட்டாயச் சேவைக் காலம் இலங்கை பொலிஸில் சேவை செய்ய வேண்டும். (பொலிஸ் உப சேவைக்கு ஆட்சேர்க்கும் உத்தியோகத்தர்களுக்காக பொருந்தாது)

(6) கட்டாயச் சேவைக் காலத்தை இறுதியடைவதற்குப் பின்னர் எந்தவொரு உத்தியோகத்தரும் பதவியிலிருந்து விலக நினைத்தால் அவரின் பயிற்சி மற்றும் சீருடைகளை உள்ளடக்கிய ஏனைய செலவுகளுக்காகவும் நியமிக்கப்படும் பணம் இருந்தால் அவை அனைத்தும் ராஜினாமா கடிதத்தை ஒப்படைக்கும் போது செலுத்த விருப்பத்தைக் கூறும் ஒப்பந்தத்தை அவர்களால் கைச்சாத்திடல் வேண்டும். பதவியிலிருந்து விலகுதல் தொடர்பான தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயற்படும். (பொலிஸ் உப சேவைக்கு ஆட்சேர்க்கும் உத்தியோகத்தர்களுக்காக பொருந்தாது)

(7) கட்டாயமாக ஆட்சேர்க்கும் உத்தியோகத்தர்கள் பதவி நியமனத்தை பெறுவதற்கு முன்னர் அனைத்து கடன் மற்றும் கடன் கடப்பாடுகளிலிருந்து விடுபட வேண்டும். (பொலிஸ் உப சேவைக்கு ஆட்சேர்க்கும் உத்தியோகத்தர்களுக்காக பொருந்தாது)

(8) தன்னார்வ உப பொலிஸ் பரிசோதகர்கள் (உப சேவை/மகளிர் பொலிஸ் பரிசோதகர்கள் (உப சேவை) பயிற்சியை ஆரம்பித்தவுடனே இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கமைய பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை இலக்கம் 1693/2003 மற்றும் 1804/2004 க்கு அமைய பொலிஸ் நெறிமுறைகள் கோவைக்கமைவாக செயலாற்றுகின்றீர்கள் என சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும்.

10. **வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

| எந்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை என்பது | வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டியது எத்தனை வருடங்களுக்கு முன்? | வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் தன்மை எழுத்துப் பரீட்சை/தொழிற் பரீட்சை/சான்றிதழ் பாடநெறி/ வேறு |
|---|---|---|
| 01 ஆம் வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (சேவை நிரந்தரமாக்கல்) | உப பொலிஸ் பரிசோதகர்கள் (துணைச் சேவை) பதவிக்கு நியமித்து 03 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர்) | பேச்சு, எழுத்து மற்றும் செயன்முறை |
| 02 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் உப பரிசோதகர்கள் (துணைச் சேவை) பதவிக்கு நியமனம் பெற்று 07 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் | பேச்சு, எழுத்து மற்றும் செயன்முறை |
| 03 ஆம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் உப பரிசோதகர்கள் (துணைச் சேவை) பதவிக்கு நியமித்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் | பேச்சு, எழுத்து மற்றும் செயன்முறை |

11. மொழித்தேர்ச்சி

| மொழி | பெற்றுக்கொள்ள வேண்டிய மொழித் தேர்ச்சி |
|---|---|
| அரச கரும மொழி | அரச கரும மொழியல்லாத மொழி ஊடகம் மூலம் சேவைக்கு இணைந்த உத்தியோகத்தர்களால் அரச கரும மொழித்தேர்ச்சியை அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் அதற்கு அமைவான சுற்றறிக்கைக்கு அமைய பெற்றுக்கொள்ள வேண்டும். |
| ஏனைய அரசகரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் அமைவான சுற்றறிக்கைக்கு அமைய குறித்த மட்டத்தின் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| இணைப்புமொழி | பொருந்தாது. |

12. விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை தனது விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும் :- (மூலப் பிரதிகளை சமர்ப்பிக்கக்கூடது)

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) நன்னடத்தையைப் பற்றி அண்மையில் பெற்றுக்கொண்ட இரண்டு சான்றிதழ்கள். (உறவினர் அல்லாத) ;

(iii) கல்வித் தகைமைகளை உறதிப்படுத்துவதற்கான சான்றிதழ்;

(iv) விசேட சாதனைகள் கொண்ட விளையாட்டுகள் பற்றிய அல்லது விடய சாராத செயற்பாடுகள் தொடர்பாக பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள் ;

(v) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருந்தால் மாத்திரம்) ;

(vi) தேசிய ஆள் அடையாள அட்டையின் ஒரு பிரதி.

13. 13.1 ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பப்படிவத்தை குறித்த திணைக்களத் தலைவர்களால் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரியை தெரிவு செய்திருந்தால் அவரை விடுவிக்க முடியும் என்பதைக் குறிப்பிட்டு ஒரு சான்றிதழை இணைத்து அனுப்பவேண்டும்.

13.2 விண்ணப்பதாரியால் விண்ணப்பப்படிவத்தை 11" x 8" அங்குலமுடைய தாளில் தனது கையெழுத்தாலே பூர்த்தி செய்து குறித்த சான்றிதழ் பிரதிகளோடு மேற்குறித்த இரண்டாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும்படி அனுப்புதல் வேண்டுமென்பதுடன் எக்காரணம் கொண்டும் அதை எந்தவொரு உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட முறையில் ஒப்படைத்தல் கூடாது.

14. இவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகள் அனைத்து முறைகளிலும் உறுதிப்படுத்தாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். (அவ்வாறான விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக பதில் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.)

**குறிப்பு**.- பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்குப் போக்குவரத்துச் செலவுகள் அல்லது ஏனைய செலவுகள் எதுவும் செலுத்தப்படமாட்டாது.

சீ. டீ. விக்கிரமரத்ன,
பதிற் கடமையாற்றும்,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு - 01.

**இலங்கைப் பொலிஸ்**

மாதிரி விண்ணப்பப்படிவம்

உதவிச் சேவை உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பெண் உப பொலிஸ் பரிசோதகர் (கதிரியக்க வல்லுநர்/மருந்தாளர்/மின்சார இருதய துடிப்பு தொழில்நுட்பவியலாளர்/பௌதீக சிகிச்சையாளர்/மருத்துவ ஆய்வுக்கூட தொழல்நுட்பவியலாளர்) பதவிகள்

1. (அ) முழுப் பெயர் :----------------------------------------------------------.
(தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக பிறப்புச் சான்றிதழில் உள்ள படி)

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :------------------------------------------------------.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----------------------------------------------------------------.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :------------------------------------------.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :---------------------------------------------------.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :----------------------------------------------.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :----------------------------------------------.

மாகாணம் :--------------------------------.

5. (அ) தற்போதைய முகவரி :-----------------------------------------------------------------.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :---------------------------------------------------------.

(இ) நிரந்தர முகவரி :-------------------------------------------------------------------------------------.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-------------------------------------------------------------------.

(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :--------------------------. பிரதேச செயலகம் :---------------.

(ஊ) கடிதம் அனுப்பும் முகவரி :-------------------------------------------------------.

(எ) தொலைபேசி இல. வீடு :------------------------------. கையடக்க தொலைபேசி இல. :--------------------------------.

6. (அ) இனம் :------------------------------------.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

(இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பிறந்த இடம் :-

(1) விண்ணப்பதாரர் :-------------------------------------------.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :---------------------------------.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :---------------------.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----------------.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : (அங்குலம்) :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறன்கள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----------------------------------.
(ஆ)-----------------------------------.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீர்களா ? :-----.
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.
ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீர்களா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீர்களா ? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ...................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

பதவி :-----.
திகதி :-----.

02-663

## இலங்கை நிரந்தர/தொண்டர் விமானப் படை

## வான் படை வீரர் /வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தர/தொண்டர் வான் படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில், வான்படை வீரர் /வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன.

**அடிப்படை கல்வித் தகைமைகள்**

2. க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள் இருத்தல் வேண்டும்.

**3. தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும்**

(அ) வானூர்தி பொறியியல் (ஆண் /பெண்)

(1) வான் அமைப்பு இயந்திரவியலாளர் (Aircraft Structural Technician)
(2) வானூர்தி இயந்திரவியலாளர் (Aircraft Engine Technician)
(3) வானூர்தி மின்னியல் கருவிகள் இயந்திரவியலாளர் (Aircraft Electrical and Instrument Technician)
(4) வானூர்தி கருவிகள் பாதுகாப்பு உதவியாளர் (Aircraft Safety Equipment Technician)

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

மற்றும்

தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு வானூர்தி மின்னியல் கருவிகள் இயந்திரவியலாளர் (Aircraft Electrical and Instrument Technician) (இலத்திரனியல் /மின்னியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு (இலத்திரனியல்/மின்னியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் விஷேட தகைமையாக கருதப்படும்.

(ஆ) பொது பொறியியல் (ஆண்)

(1) ஆயுத இயந்திரவியலாளர்
(2) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர்
(3) மேற்பரப்பு தொழில்நுட்ப உதவியாளர்
(4) உலோக தகடு இயந்திரவியலாளர்
(5) மரக்கலை இயந்திரவியலாளர்
(6) பொது இயந்திரவியலாளர்
(7) வானூர்தி காய்ச்சிப் பொருத்தும் உதவியாளர்
(8) வான் படப்பிடிப்பாளர்
(9) இரும்பு கடைச்சல் இயந்திரவியலாளர்

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி மேலதிக தகைமையாகும்.

(10) மோட்டார் வாகன இயக்குநர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். வாகன அனுமதிப் பத்திரம் இருத்தல் ஆட்சேர்த்தலின் மேலதிக தகைமையாக கருதப்படும்.

(இ) **மின்னணுவியலும் தொலைத்தொடர்பும் பொறியியல்**

(1) வான் வானொலி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)
(2) வான் தொலை தொடர்பாளர் (ஆண்)

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி இருத்தல் வேண்டும்.

(3) வான் வழி தகவல் பரிமாற்றுதல் (ஆண்)
(4) தொலைபேசி இயக்குனர் (ஆண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(ஈ) **வைத்தியத் துறை**

(1) தாதி உதவியாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச்சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச்சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். /க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம்/ கணிதம் ஆகியவற்றில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சி நெறியை பெற விஷேட தகைமையாக கருதப்படும். க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி மேலதிக தகைமையாகும்.

| | |
|---|---|
| க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் உட்பட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல்/இணைந்த கணிதம்/விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் | - தாதியர் டிப்ளோமா (ஆண்/ பெண்) |
| க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் உட்பட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம்/ இணைந்த கணிதம் /பௌதீகவியல் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல். இரசாயனவியல் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் | - மருந்தாக்கர் (ஆண்/ பெண்) மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (ஆண்/பெண்) |
| க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் இரசாயனவியல் / பௌதீகவியல் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல் உயிரியல் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் | - ECG /EEG தொழில்நுட்பவியலாளர் (ஆண்/பெண்) |
| க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் இரசாயனவியல்/ இணைந்த கணிதம் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல் அல்லது உயிரியல்/பௌதீகவியல் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் | X Ray தொழில் நுட்பவியலாளர், கண்சிகிச்சை தொழில்நுட்பவியலாளர் (ஆண்/பெண்) |
| க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் இரசாயனவியல் /விவசாய விஞ்ஞானம்/ பௌதீகவியல் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல். இணைந்த கணிதம்/ உயிரியல் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் | வான் படை சுகாதார பரிசோதகர் (ஆண்) |

(2) பல் வைத்திய உதவியாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச்சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச்சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்ப பிரிவு ஆகியவற்றில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சி நெறியை பெற்றிருத்தல் விஷேட தகைமையாக கருதப்படும்.

(உ) **பரிபாலன துறை**

(1) பரிபாலன உதவியாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/விஞ்ஞானம்/வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் சித்தி, உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் பரிபாலன துறைக்கு மேலதிக தகைமையாக கருதப்படும்.

(ஊ) **தொழிற்பாடுகள் துறை**

(1) வான் தொழிற்பாடுகள் (ஆண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்

(2) தீயணைப்பாளர் (ஆண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். இலகு வாகன அனுமதிப் பத்திரம் இருத்தல் ஆட்சேர்த்தலின் மேலதிக தகைமையாக கருதப்படும்.

(3) பூமி தொழிற்பாட்டாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(எ) **உபகரணத் துறை**

(1) வழங்குநர் உதவியாளர் (ஆண் /பெண்)
(2) வானூர்தி எரிபொருள் வழங்குநர் (ஆண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சித்தியும், கணிதம் /விஞ்ஞானம் /வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றுக்கு திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணனி அனுபவம் இருத்தல் உபகரணத் துறைக்கு விஷேட தகைமையாக கருதப்படும்.

(3) உணவக மேற்பார்வையாளர் (ஆண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(4) போசணசாலை மேற்பார்வையாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் ஆங்கில மொழி சரளமாக பேசும் திறமை இருப்பின் ஆட்சேர்ப்பின் போது முந்துரிமை வழங்கப்படும். சுற்றுலாத் துறையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களில் பெற்ற அனுபவம் துறைசார்ந்த தகைமை இருப்பின் ஆட்சேர்ப்பின் போது முந்துரிமை வழங்கப்படும்.

(5) வானூர்தி கடமையாளர் (ஆண் /பெண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். ஆங்கில மொழி சரளமாக பேசும் திறமை மற்றும் சிறந்த தோற்ற அமைப்பு கட்டாயம் இருத்தல் வேண்டும். வானூர்தி கடமையாளர் அனுபவம் இருத்தல் வானூர்தி கடமையாளர் துறைக்கு மேலதிக தகைமையாக கருதப்படும். (உயரமானது பாதத்திலிருந்து கைகள் நீட்டினால் செ. மீ. 212 ற்கு இருத்தல் வேண்டும்)

(6) சீருடை நிருமாணிப்பாளர் (ஆண்/பெண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். JUKI machine தொடர்பான அனுபவம் இருத்தல் (Over lock,

Button Hole, Button Attached, Double Needle, Bar Tack), வெட்டுதல் மற்றும் ஆடையமைப்பு அனுபவம் துறைசார்ந்த மேலும் தையல் இயந்திரத்தை சீரமைக்கும் தகைமை இருப்பின் ஆட்சேர்ப்பின் போது முன்னுரிமை வழங்கப்படும்.

(ஏ) **பொலிஸ் துறை (ஆண் /பெண்)**

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திகள். உயரம் ஆண் 5 அடி 8 அங்குலமும் அதற்கு மேலும். பெண் 5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும் இருப்பின் முந்துரிமை வழங்கப்படும்.

(ஐ) **உடற் பயிற்சியாளர் (ஆண்)**

க.பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள் தேசிய மட்டத்தில் மெய்வல்லுனர் விளையாட்டு தொடர்பான தகைமை விஷேட கவனத்தில் கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து விண்ணப்பதாரர்களும் செயன்முறை பயிற்சியில் சித்தியடைதல் வேண்டும்.

இலங்கை விமானப் படை நிரந்தர வீரர் /வீராங்கனைகளுக்கான நேரடி ஆட்சேர்ப்புக்கான வெற்றிடங்கள்

4. **தொழிற்துறையும் தேவைப்படும் கல்வித்தகைமை மற்றும் தொழிற்தகைமையும்**

(அ) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர் பிரிவு (ஆண்)

(1) வான் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர்

(2) தொலைபேசி இயந்திரவியலாளர்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம். விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி இருத்தல் வேண்டும்.

மற்றும்

தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு பொறியியலாளர் (தொலைத்தொடர்பு/இலத்திரனியல்/ மின்னியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு பொறியியலாளர் (தொலைத்தொடர்பு /இலத்திரனியல்/ மின்னியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். தேசிய தொழிற்துறை தகைமையில் நான்காம் மட்டம் (NVQ Level IV) பெற்றிருப்பது மேலதிக தகைமையாக கருதப்படும்.

(ஆ) பொது பொறியியல்

(1) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் (ஆண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் மோட்டார், போக்குவரத்து மின்னியல் இயந்திரவியலாளர், போக்குவரத்து வளி சீராக்கி இயந்திரவியலாளர், போக்குவரத்து சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி இயந்திரவியலாளர் தொண்டர் வான் படையில் ஆட்சேர்ப்பது தொடர்பாக மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றின் முழுநேர ஆறு மாத அல்லது பகுதி நேர ஒரு வருட பயிற்சியை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இதற்கு மேலும் அனுபவம் வேண்டும். அல்லது மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் மோட்டார், போக்குவரத்து மின்னியல் இயந்திரவியலாளர், போக்குவரத்து வளி சீராக்கி இயந்திரவியலாளர், போக்குவரத்து சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி இயந்திரவியலாளர் தொண்டர் வான் படையில் ஆட்சேர்ப்பது தொடர்பாக மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் கற்கைநெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது இதற்கு மேலும் அனுபவம் வேண்டும். அல்லது தேசிய தொழிற்துறை தகைமையில் நான்காம் மட்டம் (NVQ Level IV) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் மோட்டார், போக்குவரத்து மின்னியல் இயந்திரவியலாளர், போக்குவரத்து வளி சீராக்கி இயந்திரவியலாளர், போக்குவரத்து சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி இயந்திரவியலாளர் தொண்டர் வான் படையில் ஆட்சேர்ப்பது தொடர்பாக மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் கற்கைநெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) இரசாயன தொழில்நுட்பவியலாளர் (ஆண்)

க. பொ. த. (சா.த)பரிட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் /தமிழ் , ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள் க.பொ.த. (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணித/ விஞ்ஞான பிரிவுகளில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் விஷேட தகைமையாக கருதப்படும்.

இலத்திரனியல் நிறப் பூச்சு தொடர்பாக தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றின் முழுநேர ஆறு மாத அல்லது பகுதி நேர ஒரு வருட பயிற்சியை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இரசாயன தொழில்நுட்பவியலாளர் தொடர்பாக டிப்ளோமா இருத்தல் அல்லது Surface Treatment அதற்கு சமனான தகைமையுடன் 02 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் . தேசிய தொழிற்துறை தகைமையில் மூன்றாம் மட்டம் (NVQ Level III) இருத்தல் வேண்டும். அல்லது கைதொழில் அபிவிருத்தி சபையில் (IDM) யில் பயிற்சி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

(ஈ) கணினி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

கணினி தொடர்பான முழுநேர ஆறு மாத கால பயிற்சி நெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலும் வலையமைப்பு/ மென்பொருள் விருத்தி/ வன் பொருள் மற்றும் மென்பொருள் புதுப்பித்தல் தொடர்பாக 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். கணினி தொடர்பான முழுநேர ஒரு வருட கால பயிற்சி நெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலும் வலையமைப்பு/ மென்பொருள் விருத்தி/ வன் பொருள் மற்றும் மென்பொருள் புதுப்பித்தல் தொடர்பாக 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

5. **ஏனைய தகைமைகள்:-**

இலங்கை நிரந்தர / தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) தேசிய இனம் :- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) வயது :- 2020, யூலை 15 ஆந் திகதியன்று

**நிரந்தர**
ஆண் -18 -23 வயது இருத்தல் வேண்டும்.
பெண் -18 -22 வயது இருத்தல் வேண்டும்.

**தொண்டர்**
ஆண் -18 -30 வயது இருத்தல் வேண்டும்.
பெண் -18 -28 வயது இருத்தல் வேண்டும்.

**நேரடி ஆட்சேர்ப்பு**
ஆண் -18 -28 வயது இருத்தல் வேண்டும்.
பெண் -18 -26 வயது இருத்தல் வேண்டும்.

(3) உயரம் :- ஆண் - 5 அடி 5 அங்குலமும் (165 cm) அதற்கு மேலும்.
பெண் - 5 அடி 3 அங்குலமும் (160.2 cm) அதற்கு மேலும்

(4) உடல் நிறை :- ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26
பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25

$$\text{உடற் பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி)}}{\text{உயரம் (மீ)}^2}$$

(5) பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

(6) மார்பு :- குறைந்தது 32 அங்குலம் (ஆண்)

(7) தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(8) **குடியியல் நிலை :-**

(அ) நிரந்தர வான் படை வீரர் / நிரந்தர வான் படை வீராங்கனை விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான் படையில் இணைந்து நான்கு (4) ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் அடிப்படை மற்றும் தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்து பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

(ஆ) விவாகமாகாத 25 வயதை விட அதிமாக படை வீரர் / வான் படை வீராங்கனைகள் வான் படையில் இணைந்து ஒரு (1) ஆண்டு பூர்த்தியடைவதுடன் அடிப்படை மற்றும் தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்து பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

(இ) நேரடி ஆட்சேர்ப்பில் இணையும் வான் படை வீரர் /வான் படை வீராங்கனைகள் வான் படையில் இணைந்து ஒரு (1) ஆண்டு அடிப்படை பயிற்சியை பூர்த்தி செய்து பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

(ஈ) நடன பிரிவில் உள்ள வான் படை வீராங்கனைகள் இணைந்து தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்து ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

6. பந்தி 2, 3, 4 மற்றும் 5 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித்திறமைகளை நிறைவு செய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற் தகைமை மட்டத்தை கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.தேவையான உயரம், நிறை, கண் பார்வை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் அவரது விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

7. விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற் கொள்ளப்படும்.

8. **சேவை நிபந்தனைகள்.-**

அ. தெரிவு செய்யப்படும் தொழில் துறைக்குரிய நிரந்தர வான்படை வீரர் / நிரந்தர வீராங்கனைகள் அடிப்படை பயிற்சியும் அதன் பின் தொழில் துறைப் பயிற்சி வழங்கப்படுவதுடன், வான் படை வீரர்கள் அடிப்படை பயிற்சியும் வழங்கிய பின் அவர்கள் (நிரந்தர/தொண்டர்) சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

ஆ. வான்படை வீரர்/ வீராங்கனைகள் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

இ. வான்படை வீரர் /வீராங்கனைகளாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

ஈ. ஒவ்வொரு வான்படை வீரர் /வீராங்கனைக்கும் அனைத்து வகை சீருடைகள் உபகரணங்கள் மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

உ. வான்படை வீரர் /வீராங்கனைகள் பயிற்சிக் காலத்தின்போது வான்படை வீரர் /வீராங்கனைகள் வான்படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

ஊ. ஒரு வான்படை வீரர் /வீராங்கனைகள் பயிற்சியின் போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய வான்படை வீரர் /வீராங்கனைகள் பொருட்டு அதுகாலவரையில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

எ. ஒரு வான்படை வீரர்/ வீராங்கனைகள் தமது பயிற்சியின் போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைக் குடியரசுக்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின்சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும் படியும் தேவைப்படுத்தப்படுவர்.

ஏ. பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் ஊ , எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 28 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத் தேர்வுநாடிகள் வான்படை வீரர் / வீராங்கனை நியமிக்கப்படு

வதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப்படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

ஐ. பந்தி 02 இலும் 03 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வுநாடிகள் முதலாவது நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் சித்தி பெறும் தேர்வு நாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன் (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச்சபைக்கு உட்படுத்தப்படுவர். கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வு நாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப்பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

ஒ. திருமணமாகாத வான்படை வீரர்/ வீராங்கனைகள் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப் படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத வான்படை வீரர் /வீராங்கனையின் உணவுப்படி உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

ஓ. திருமணமாகிய வான்படை வீரர் /வீராங்கனை (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

ஔ. எல்லா வான்படை வீரர் /வீராங்கனைகள் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

ஃ. எல்லா வான்படை வீரர் /வீராங்கனைகள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

9. **ஆட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகள்**

அ. நிரந்தர வான்படை வீரர் /நிரந்தர வீராங்கனைகள் தொடர்பாக

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 08 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். மேலும், 08 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 04 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது மீண்டும் அழைக்கப்படும் போது சமுகமளிக்க வேண்டும். 08 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

ஆ. தொண்டர் வான்படை வீரர் /தொண்டர் வீராங்கனை தொடர்பாக

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 05 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். 05 ஆண்டுகள் கழிந்த பின் வான்படை தளபதியின் அனுமதியுடன் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தி யாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

10. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கை குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆகப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆகப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

11. **சம்பளமும் கொடுப்பனவுகளும்**.-

அ. தற்போதிலிருந்து 2020 வருடத்திற்கான ஏற்புடையதாக அடிப்படை சம்பள விகிதங்கள் பின்வருமாறு (மாதமொன்றுக்கு).

| வருடம் / நிலை | அடிப்படை சம்பளம் | ஏனைய கொடுப்பனவுகள் | குறைக்கப்படாமல் முழுச் சம்பளம் |
|---|---|---|---|
| விமான வீரன் | 29,540.00 | 12,150.00 | 41,690.00 |
| முன்னணி விமான வீரன் | 30,440.00 | 12,150.00 | 42,590.00 |
| கோப்ரல் | 31,340.00 | 12,150.00 | 43,490.00 |

12. **விண்ணப்பதாரருக்கான அறிவுறுத்துதல்கள்**

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2020, மாச்சு 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி கட்டளை ஆட்சேர்ப்பு அலுவலகம், இலங்கை விமானப்படை தொழிற்துறை பயிற்சி பாடசாலை ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை விமானப்படை வான்படை நிரந்தர/தொண்டர் வீரர்/வீராங்கனைகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவு திகதியின் பின்னர் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

ஆ. அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில் /சபையில் /குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின் /குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர்.

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப் பிரதி மற்றும் பிரதி (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(2) தேசிய ஆள் அடையாள அட்டையின் மூலப் பிரதி மற்றும் பிரதி.

(3) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ், மூலப் பிரதி மற்றும் பிரதி.

(4) ஆங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில் / தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன் /அல்லது அனுபவச் சான்றிதழின் (எவையேனுமிருப்பின்) மூலப் பிரதி மற்றும் பிரதி.

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்பு வாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில்தருநரினதாக இருத்தல் வேண்டும்.

(6) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள். மூலப் பிரதி மற்றும் பிரதி.

(7) வெற்று பயில் கவர் மற்றும் பயில் லேஸ்.

(8) வர்ண புகைப்படம் 2, 2×2½ அங்குல அளவு கிராம அலுவலரினால் சான்றிதழ்படுத்தப்பட்டது.

ஈ. ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

உ. ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

ஊ. விண்ணப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

13. நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டாது.

14. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய ஆள் அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய ஆள் அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பதாரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும், எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய ஆள் அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

15. தங்கள் இறுதி நேர்முகப்பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பதாரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பதாரர்கள் பெற்ற

புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற்தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வு செய்யப்படுவர்.

16. விண்ணப்பதாரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பதாரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகைமையிழக்கச் செய்யும்.

17. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படுமிடத்து ஏதேனும் கூற்று அத்தகைய தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமை இழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

18. நேர்முகப்பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

டி. எல். எஸ். டயஸ்,
RWP, RSP and three Bars, VSV, USP, MSc
(Def & Strat Stu), ndc, psc,
எயார் மார்ஷல்,
வான் படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படையில்.................பிரிவில் ஆண் /பெண் வான்படை வீரர் /வீராங்கனைக்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம்: ..........................................................................................................................................
(இலங்கை பிரஜையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் தேதியும் குறிப்பிடுக).
2. முழுப்பெயர் (தேசிய ஆள் அடையாள அட்டையின்படி) :..............................................................................
3. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-..............................................................................
4. நிரந்தர முகவரி:-..........................................................................................................................
5. தற்போதைய அஞ்சல் முகவரி :- ..........................................................................................
6. பிறந்த தேதி :- ..........................................................................................................................
வயது :- (2020, யூலை 15 ஆந் திகதிக்கு) வருடங்கள் . . . . .. மாதங்கள். . . நாட்கள் . . .
7. உயரம் - .............. செ. மீ. (.............. அடி .....................அங்குலம்)
8. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம்-......................................................
9. மாவட்டம்:-..........................................................................................................................
10. தேர்தற் தொகுதி :-.....................................................................................................................
11. கிராம அலுவலர் பிரிவு:- ........................................................................................
12. தொலைபேசி இலக்கம்.:- .........................................................................................................
13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா:- ..........................................................................
14. பால்.:- ..........................................................................................................................
15. பாடசாலை பற்றிய விபரங்கள் ...................................................................... ..............................
16. பாடசாலை அத்துடன் /அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள்-

| பாடசாலை /சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா/த.)<br>க.பொ.த. (உ/த.)<br>வேறு | | |

17. பாடசாலை /பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள்.-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் -

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் -

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் -
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள்-
(திகதிகளுடன் விபரத்தையும் தருக.)

22. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை-

23. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக-

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின், விபரங்கள் தருக. -

25. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில் /கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி / பல்கலைக்கழகங்கள் / அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட ) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம்-

26. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் -

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

27. விண்ணப்பதாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை -

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் எனது அறிவிக்கும் விசுவாசத்துக்கும் ஏற்ப சரியானவை என உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

.............. ....................................................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

*28.* விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை -

அ. இலங்கை வான்படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . என்பவரின் பெற்றோர்/பாதுகாவலர் நான் ஆவேன்.

ஆ. மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொருப்பாளியாவேன் -

(1) பயிற்சியின் போது ஆணைக்கான அவரது தேர்வுநாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கை குடியரசுக்கு திருப்பிக் கொடுப்பதற்கும்,

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக் காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும்,

உடன்படுகின்றேன்.

.....................................................
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

திகதி :- ..................................................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) :-.........................................................................................
முகவரி :-..................................................................................................................................

....................................................
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

திகதி :- ..................................................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) :-.........................................................................................
முகவரி :-..................................................................................................................................

......................................................
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

திகதி :- ..................................................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்):-.......................................................................................
முகவரி :-..................................................................................................................................

*2-701*

---

## இலங்கை நிரந்தர வான்படை

## பயிலிளவல் ஆண் /பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்

*1.* இலங்கை நிரந்தர வான்படையில் கீழ் வரும் பிரிவுகளில் பயிலிளவல் ஆண் /பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

(அ) பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவு (ஆண்)
(ஆ) தொழில்நுட்பப் பொறியியல் பிரிவு (ஆண்/பெண்)
(இ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு (ஆண்)
(ஈ) உபகரணப் பிரிவு (ஆண்/பெண்)
(உ) நிருவாகப் பிரிவு (ஆண்)
(ஊ) நிருவாக ரெஜிமென்ட் பிரிவு (ஆண்/பெண்)

(எ) வான் வழி நடத்துநர் பிரிவு (வான் வழி கட்டுப்பாடு) (ஆண்)
(ஏ) பொலிஸ் பிரிவு (ஆண்)
(ஐ) தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு (ஆண்)
(ஒ) பரிபாலன இசைப் பிரிவு (ஆண்)

2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

3. **விஷேட தகைமை.**- BSc (Aviation Studies) பட்டப் பயிற்சிக்கு உட்செல்வதற்கான தகைமை (ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட) மேலும் விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருந்தால் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

(அ) **பொதுக்கடமை விமான ஓட்டுநர் /வான் வழி நடத்துநர் பிரிவுகள் (வான் வழிக் கட்டுப்பாடு)**

குறைந்தபட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் /தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த. (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக /உயிரியல் /தொழில்நுட்ப பிரிவுகளில் (தேவையை பொருத்து) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) **தொழில்நுட்ப பொறியியல் பிரிவு (Aeronautical) /இலத்திரனியல் பொறியியல் பிரிவு**

குறைந்தபட்சம் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் /தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல்) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) **உபகரணப் பிரிவு / நிருவாகப் பிரிவு/நிருவாக ரெஜிமன்ட் /பொலிஸ் பிரிவு**

குறைந்தபட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக /உயிரியல் /வர்த்தக/தொழில்நுட்ப/கலை பிரிவுகளில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் பொலிஸ் பிரிவில் 5' 8" உயரம் இருக்குமாயின் ஆட்சேர்த்தலில் முந்துரிமை வழங்கப்படும்.

(ஈ) **தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு**

குறைந்தபட்சம் க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் /தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த. (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக பிரிவில் /தொழில்நுட்ப பிரிவில் தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாக இருப்பதுடன் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) **பரிபாலன இசைப் பிரிவு**

குறைந்தபட்சம் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம்/தமிழில் மற்றும் கலை பாடங்களில் மேலைத்தேய சங்கீதத்தில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கலைப்பிரிவில் மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீதத்தில் திறமைச்சித்தி உட்பட மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருப்பதுடன் மேலைத்தேய இசையில் அல்லது (Trinity, Royal, LCM or any other) றோயல் கல்லூரியில் அல்லது திரின்ரி கல்லூரியில் தரம் 5 வரை அல்லது அதற்கு மேலும் லண்டன் கல்லூரியில் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட துறையில் 3 அல்லது மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீதத்தில் அனுபவம் இருத்தல்.

மேலைத்தேய /கீழைத்தேய இசை உருவாக்கும் திறமையுடன் மேலைத்தேய /கீழைத்தேய வாத்தியக் கருவிகளை இசைப்பதில் சிறந்த அறிவு இருத்தல் விஷேட தகைமையாக கருதப்படும்.

4. **விஷேட தகைமை பட்டப்படிப்பு அல்லாத கல்வித்தகைமை**

அ. பொதுக்கடமை விமான ஓட்டுனர் /நிருவாக /நிருவாக ரெஜிமன்ட் பிரிவுகள்

குறைந்தபட்சம் க.பொ.த (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் /தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் இல்லாமல்)

5. **விஷேட குறிப்பு**.- Pearson / Edexcel /சர்வதேச சாதாரண /உயர் தர மற்றும் GCSE, GCE மற்றும் கேம்பிரிட்ஜ் பரீட்சைப் பெறுபேறுகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் பெறுபேறுகள் அதற்குச் சமனான தகைமை என தங்களால் நிரூபிக்கப்படுமானால் ஏற்றுக்கொள்ளப்படும்.

6. **வேறு தகைமைகள்**.- இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்குப் பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாகப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

அ. தேசிய இனம் :- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. வயது :- 2020, யூலை 15 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

இ. உயரம் :- ஆண் சென்றிமீட்டர் 167.5 (5 அடி 6 அங்குலத்திற்கு) குறையாதிருத்தல் வேண்டும்.
பெண் சென்றிமீட்டர் 162.5 (5 அடி 4 அங்குலத்திற்கு)குறையாதிருத்தல் வேண்டும்.

ஈ. உடல் நிறை :- ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26
பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி .கி)}}{\text{உயரம் (மீ)}^2}$$

உ. மார்பு :- ஆண் -32" (குறைந்தது)

ஊ. பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

எ. தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி மற்றும் கண் வில்லை பயன்படுத்தப்படாமல் )

ஏ. குடியியல் நிலை :- விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின் போதும் ஆணை பெற்ற தேதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கு திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

7. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

8. மூன்றாம், நான்காம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற் தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

9. தேவையான தகைமை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படைத் தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

10. **சேவை நிபந்தனைகள்** :-

அ. தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படைப் பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொறுத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவி வரிசையில் நிரந்தர ஆணையொன்றைப் பெறுவர்.

ஆ. பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

இ. பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

ஈ. ஒவ்வொரு பயிலிளவலுக்கும் அனைத்து வகை சீருடைகள், உபகரணங்கள், மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

உ. பயிலிளவலின் பயிற்சிக் காலத்தின்போது பயிலிளவலுக்கு வான் படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

ஊ. ஒரு பயிலிளவல் பயிற்சியின் போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அதுகால வரையில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைக் குடியரசுக்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

எ. ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின் போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைக் குடியரசுக்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின் சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

ஏ. பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 28 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத் தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப்படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

ஐ. பந்தி 03 இலும் 04 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வு நாடிகள் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தேர்வு நாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன் (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச்சபைக்கு உட்படுத்தப்படுவர். தேவைப்படின் விமானத்தில் செல்லும் திறமையும் பரீட்சிக்கப்படும் அலுவலர் தரப்பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். குடும்ப நல பரீட்சைக்கும் பின்னர் இறுதி நேர்முகப்பரீட்சைக்கும் சமுகமளிக்க வேண்டும். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வு நாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

ஒ. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

ஓ. திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானது போன்று வாடகை அறவிடப்படும்.

ஔ. எல்லா அலுவலருக்கும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

ஃ. எல்லா அலுவலருக்கும் வான்படைச் சட்டத்தினாலும் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் நிறுவகிக்கப்படுவர்.

11. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.**- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

12. **சம்பளமும் கொடுப்பனவுகளும்.-**

அ. தற்போதிலிருந்து 2020 ஆம் வருடத்திற்கான ஏற்புடையதாக அடிப்படைச் சம்பள விகிதங்கள் பின்வருமாறு: மேற்குறிப்பிட்டவாறு இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு: 2019 இல் இருந்து கிடைக்கப்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது (ஆண்டொன்றுக்கு)

| வருடம் | 2020 (வருடத்திற்கு) |
|---|---|
| பதவிநிலை | |
| பயிலிளவல் | ரூபா 388,560.00 |
| பைலட் ஒபிசர் (மாணவ நுழைவு) | ரூபா 463,260.00 |
| பைலட் ஒபிசர் (மாணவர் அல்லாத நுழைவு) | ரூபா 502,860.00 |
| ப்ளையின் ஒபிசர் | ரூபா 571,380.00-(30×16,020) =ரூபா 1,051,980.00 |
| ப்ளைற் லெப்டினன்ட் | ரூபா 667,500.00 -(24× 16,020)=ரூபா 1,051,980.00 |
| ஸ்குவாட்ரன் லீடர் | ரூபா 731,580.00 -(22× 16,020)=ரூபா 1,084,020.00 |
| விங் கமாண்டர் | ரூபா 751,140.00-(17× 19,560)=ரூபா 1,083,660.00 |

ஆ. **ஏனைய கொடுப்பனவுகள்**

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800.00.

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250.00 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி: மாதமொன்றுக்கு ரூபா 620.00.

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,380.00 (மாதமொன்றுக்கு).

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,100.00

(6) இடைக்கால கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000.00. (இடைக்கால கொடுப்பனவானது 2019, வரவு செலவு திட்டத்திற்கு அமைவாக மாதமொன்றுக்கு ரூபா 2,500.00 ஆக மாற்றப்பட்டுள்ளது.)

(7) சீருடை பேணுதல் படி ரூபா 525.00

(8) சேவையாளர் படி: மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்).

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 24,005.47 (வெளியில் வசிக்க அனுமதி உள்ளவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூபா 774.37வீதம் வழங்கப்படும்).

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் பைலற் ஆபீசர் இருந்து ஸ்கோர்டன் லீடர் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 3,200.00 இல் இருந்து ரூபா 8,500.00 - வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(12) தொலைபேசிக் கட்டணம் விங்கமாண்டர் முதல் எயார் வைஸ் மார்ஷலுக்கு மாதமொன்றுக்கு ரூபா 3,200.00 இல் இருந்து ரூபா 8,500.00.

(13) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், துணைவிக்கும் பிள்ளைகளுக்கும் )

(14) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொருதடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.

(15) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(16) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(17) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(18) பொதுக்கடமை விமான ஓட்டுனர் கிளையில் உள்ளவர்களுக்கு பறத்தல் சம்பளம் வழங்கப்படும்.

(19) பொறியியல் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் ரூபா 15.000.00 ( பொறியியல் அதிகாரிகளுக்கு மாத்திரம்).

13. **ஓய்வூதியங்கள் / பணிக்கொடைகள்.**- காலத்திற்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான் படை ஓய்வூதிய அத்துடன் பணிக்கொடைகள் கோவையின் நியதிகளின்படி கொடுபடற்பாலனவாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள், அநாதைகள் (ஆயுதம் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துபவராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை, அநாதை (ஆயுதம் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளவாறாகும்.

12. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் -**

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடிய வரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2020, மாச்சு 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, கட்டளை ஆட்சேர்ப்பு அலுவலகம், தொழிற்துறை பயிற்சி பாடசாலை, இலங்கை விமானப்படை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "பயிலிளவியல் ஆண் /பெண் அலுவலர்களுக்கான விண்ணப்பம் . . . . . . . . . . . . . பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

ஆ. அரசாங்க சேவையில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரிகளது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின் / குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. தேர்வுநாடி நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படும் போது அல்லது அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும் போது பின்வருவனற்றின் மூலப் பிரதிகளை மற்றும் பிரதிகளை காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர்.

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப் பிரதி மற்றும் பிரதி (கல்விச்சட்டகோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(2) தேசிய ஆளடையாள அட்டையின் மூலப் பிரதி மற்றும் பிரதி;

(3) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் பிரதி;

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன் / அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) மூலப் பிரதி மற்றும் பிரதி;

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்விகற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பத்தாரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில்தருநரினதாக இருத்தல் வேண்டும்;

(6) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்களின் மூலப் பிரதி மற்றும் பிரதிகள்;

(7) வெற்று பயில் கவர் மற்றும் பயில் டேக்;

(8) இரு வர்ண புகைப்படம் 2 × 2 ½ அங்குல அளவு கிராம அலுவலரினால் சான்றிதழ்படுத்தப்பட்டது.

ஈ. ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

உ. ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

ஊ. விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

15. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

16. **தேர்ந்தெடுத்தல் நேர்முகப்பரீட்சை முதலியன :**

அ. மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையோடு பூர்வாங்கத் தெரிவுகள் செய்யப்படும். தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுநாடிகள் வான்படை ஏவுநரினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் தெரிவுச் சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித் தெரிவு நடைபெறும்.

ஆ. நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம் நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டாது.

இ. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

ஈ. நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து எழுத்துப்பரீட்சை அல்லது செயன்முறை பரீட்சை மற்றும் அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு சமுகமளிக்கும் படி தேவைப்படுத்தப்படுவர்.

ஈ. இறுதி நேர்முகப் பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

உ. ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்பும் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

ஊ. சேர்த்துக் கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் தேர்வு நாடிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

டி. எல். எஸ். டயஸ்,
RWP, RSP and three Bars, VSV, USP, MSc
(Def & Strat Stu), ndc, psc,
எயர் மார்ஷல்,
வான் படைத் தளபதி.

தலைமைக் அலுவலகம்,
இலங்கை வான் படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 02.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**இலங்கை நிரந்தர வான்படையில் ............................ பிரிவில் ஆண் /பெண் பயிலிளவல் அலுவலருக்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம்: ............................................................................................................................
   (இலங்கை பிரஜையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா? பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக).
2. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டைப்படி) :.........................................................................
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்::-..................................................................................
4. நிரந்தர முகவரி:-...........................................................................................................................
5. தற்போதைய அஞ்சல் முகவரி :- ......................................................................................................
6. பிறந்த திகதி :- ..............................................................................................................................
   வயது :- (2020, யூலை 15 ஆந் திகதிக்கு) வருடங்கள்: . . . . . மாதங்கள்: . . . நாட்கள்: . . .
7. உயரம் : .............. செ. மீ. (.............. அடி ......................அங்குலம்)
8. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் : .................................................
9. மாவட்டம் : ......................................................................................................................................
10. தேர்தற் தொகுதி :-...........................................................................................................................
11. கிராம அலுவலர் பிரிவு:- ...................................................................................................
12. தொலைபேசி இலக்கம்.:- ..........................................................................................................
13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா:- . ....................................................
14. பால் :- ......................................................
15. பாடசாலை பற்றிய விபரங்கள்: .................................................................................................................
16. பாடசாலை அத்துடன் / அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை / சர்வகலா சாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு மற்றும் சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) | |
|---|---|---|---|---|
| | க. பொ. த. (சா./த.) | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | க.பொ.த (உ./த.) பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக உறுதிப்படுத்தல் Yes ☐ No ☐ | | | |
| | | | | |
| | | | | |
| | | | பொது ஆங்கிலம் | |
| | | | பொதுப் பரீட்சை | |
| | ஏனைய தகைமைகள் | | | |

17. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் -
18. பெற்றோர் பற்றிய விபரங்கள் -

| முழுப்பெயர் | தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பாடசாலை / பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள்.-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் : ......................................
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் தேதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) : ......................................

22. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ......................................

23. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக.

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக : ......................................

25. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில், கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி / தேசிய வங்கி / பல்கலைக்கழகங்கள் / அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் : ......................................

26. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் -

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

27. விண்ணப்பதாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை :

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் எனது அறிவுக்கும் விசுவாசத்துக்கும் ஏற்ப உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்களுக்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

திகதி : ..................

...................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

28. விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :

அ. இலங்கை வான் படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் ...................................... இவருக்கு நான் பெற்றோர்/ பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன்.

(1) பயிற்சியின் போது ஆணைக்கான அவரது தேர்வுநாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கை குடியரசுக்கு திரும்பக் கொடுப்பதற்கும்.

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக் காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் உடன்படுகிறேன்.

.....................................................
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

திகதி : .........................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) : ...................................................................
முகவரி : .......................................................................................................

...................................................
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

திகதி :- .........................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) : ...................................................................
முகவரி : .......................................................................................................

.......................................................
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

திகதி : .........................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) : ...................................................................
முகவரி :.......................................................................................................

02-702

---

## இலங்கை வான்படை

## அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தர /தொண்டர் வான்படையில் ஆண் /பெண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்காணும் பிரிவுகளில் உள்ளன.

அ. தொழில்நுட்பப் பொறியியல் பிரிவு
ஆ. இலத்திரனியல் பொறியியல் பிரிவு
இ. உபகரணப் பிரிவு
ஈ. விமானத் தள நிருமாணிப்பு பிரிவு
உ. வைத்திய பிரிவு
ஊ. பல்வைத்திய பிரிவு
எ. பரிபாலன நீதிப் பிரிவு
ஏ. பரிபாலன மிருக வைத்தியப் பிரிவு
ஐ. பரிபாலன கல்வி பிரிவு
ஒ. பரிபாலன இசைப் பிரிவு
ஓ. பரிபாலன கணக்காளர் பிரிவு
ஔ. தகவல் தொழிநுட்ப பொறியியல் பிரிவு

*2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**அடிப்படைக் கல்வித்தகைமை**

அ. *குறைந்த பட்சம் க.பொ.த (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் சிங்களம் / தமிழில் சித்தியும் ஆறு பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (மேலதிக மற்றும் கட்டாயமற்ற பாடங்கள்)*

ஆ. *குறைந்த பட்சம் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் எந்த பிரிவிலாவது ஒரே அமர்வில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

இ. Pearson/Edexcel */ சர்வதேச சாதாரண/ உயர் தர மற்றும்* GCSE, GCE *கேம்பிரிட்ஜ் பரீட்சை பெறுபேறுகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் பெறுபேறுகள் அதற்கு சமனான தகைமை என தங்களால் நிரூபிக்கப்படுமானால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

**தொழிற்துறை தகைமை /கல்வித்தகைமை**

**அ. தொழில்நுட்ப பொறியியல் பிரிவு**

(1) ***தொழில்நுட்ப பொறியியல் அதிகாரி (ஆய்வாளர்) - (ஆண்) (தொண்டர்)*** *ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட* (Aeronautical, Electronic, Electrical and Material) *இலத்திரனியல், மின்னியல் மற்றும் திரவியப் பொறியியலில் பட்டச் சான்றிதழ் இருத்தல் வேண்டும்.*

*மேலும் க.பொ.த (உ.த.) பரீட்சையில் பெற்ற உயர் மட்ட பெறுபேறு உள்நாட்டு அரசாங்க பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்ட பட்டம், பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டில் முன்வைத்த செயற் திட்டம் மற்றும் இத் துறை தொடர்பாக பெற்றுக்கொண்ட பயிற்சி மற்றும் அனுபவம் முதலாம் நேர்முகப் பரீட்சையின் போது மேலதிக தகைமையாக கருதப்படும்.*

**ஆ. இலத்திரனியல் பொறியியல் பிரிவு**

(1) ***இலத்திரனியல் பொறியியல் அதிகாரி- ஆண் (நிரந்தர)*** *இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல்* BSc *பட்டம் அல்லது பௌதீக விஞ்ஞானம்* (Major) *உடன் இலத்திரனியல் / தொலைத்தொடர்பு பிரதான பாடமாக* BSc *பட்டம் அல்லது* BSc *பௌதீக விஞ்ஞானப் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் இருத்தல் வேண்டும்.* (NDT) *தேசிய தொழில்நுட்பவியலில் டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா* (HNDE), *இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா* (NDES) *பெற்றிருத்தல் வேண்டும்.* IESL *நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.*

**இ. உபகரண பிரிவு**

(1) *உணவக முகாமையாளர் ஆண்/ பெண் (நிரந்தர/ தொண்டர்) ஹோட்டல் முகாமைத்துவ டிப்லோமா பட்டச் சான்றிதழ் அல்லது தேசிய/ சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிலையத்தில் விருந்தோம்பல் உபசரணை கல்வியில் 4 தரத்திலும் முழுநேர அடிப்படை, இடை மற்றும் பயிற்சி பெற்றிருப்பதுடன் நட்சத்திர ஹோட்டலில் போசணசாலையும் உணவு முகாமைத்துவம் சம்மந்தமாக 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.*

(2) *ஆடை தொழில்நுட்ப பொறியியலாளர் ஆண் /பெண் (நிரந்தர/தொண்டர்) தொழில்நுட்ப அல்லது பொறியியல் விஞ்ஞானத்தில்* BSc *பட்டம் பெற்றிருத்தல், ஆடையணிகளின் மற்றும் உடை தொடர்பாக டிப்ளோமா பெற்றிருத்தல் விசேட தகைமையாக கருதப்படும். ஆடையணிகள் மற்றும் ஆடையணிகளின் தயாரிப்பு மற்றும் விருத்தி செய்தலின் அனுபவம் இருத்தல் வேண்டும்.*

**ஈ. விமானத் தள நிர்மாணிப்பு பிரிவு**

(1) *சிவில் /இலத்திரனியல் பொறியியல் அதிகாரி (ஆண் (நிரந்தர) சிவில்/இலத்திரனியல்பொறியியலில்* BSc *பட்டம் இருத்தல் வேண்டும்.* NDT/NDES / HNDE *உடன் சிவில்/இலத்திரனியல் பொறியியலில் டிப்ளோமா இருத்தல்*

வேண்டும். அல்லது அதற்கு சமமான தகைமை இருத்தல் வேண்டும. IESL ஆயத்தனத்தில் அங்கத்துவம் வகித்தல் மேலதிக தகைமையாகும்.

உ. **வைத்தியப் பிரிவு**

(1) **மருத்துவ ஆலோசகர் - ஆண் /பெண் (தொண்டர்)**

(அ) MD (General/Medicine) பட்டச் சான்றிதழுடன்

(ஆ) மருத்துவ ஆலோசகர் சம்பந்தமாக இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(2) **அறுவைசிகிச்சை ஆலோசகர் - ஆண் /பெண் (தொண்டர்)**

(அ) MS (General Surgery) பட்டச் சான்றிதழுடன்

(ஆ) அறுவை சிகிச்சை சம்பந்தமாக இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(3) **மயக்க மருத்துவ ஆலோசகர் - ஆண் /பெண் (தொண்டர்)**

(அ) MD (Anesthesiology) பட்டச் சான்றிதழுடன்

(ஆ) மயக்க மருத்துவ ஆலோசகர் சம்பந்தமாக இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(4) **குழந்தை மருத்துவ ஆலோசகர் - ஆண் /பெண் (தொண்டர்)**

(அ) MD (Pediatric) பட்டச் சான்றிதழுடன்

(ஆ) குழந்தை மருத்துவம் சம்பந்தமாக இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(5) **மகப்பேற்று மருத்துவ ஆலோசகர் - ஆண் /பெண் (தொண்டர்)**

(அ) MS (Gynecology and Obstetrician) பட்டச் சான்றிதழுடன்

(ஆ) மகப்பேற்று சம்மந்தமாக இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : ஆலோசகர்கள் 2020, யூலை 15 ஆந் திகதிக்கு 40 வயதிற்கு அதிகரிக்காமல் இருத்தல் வேண்டும். எனினும், 2020, யூலை 15 ஆந் திகதியன்று 40 வயதிற்கு மேல் உள்ள ஆலோசகர்களுக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் (விங்க் கமாண்டர் நிலை சம்மந்தமாக) அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

ஊ. **பல் வைத்தியப் பிரிவு**

(1) பல் அறுவை மருத்துவர்- ஆண் /பெண் (நிரந்தர/தொண்டர்) BDS பட்டம் அல்லது அதற்கு சமனான தகைமையுடன் இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைகழகம் ஒன்றில் பெற்ற BDS பட்டம் இருத்தல் வேண்டும்.

(2) பயிற்சி பெறும் (Pre-Intern) வைத்தியர் - ஆண் /பெண் (நிரந்தர) இலங்கை (SriLanka) BDS பட்டப் படிப்பில் எட்டு தவணை (8) பரீட்சைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற BDS (Sri Lanka) அல்லது அதற்குச் சமமான பட்டம். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 05 ஆண்டு தொண்டர் சேவை காலத்திற்குள் ERPM பரீட்சையில் சித்தி பெற்று இலங்கை வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இயலாத விண்ணப்பதாரிகள் (5) வருட சேவைக்குபின் நிறுத்தப்படுவார்கள்.

எ. **பரிபாலன நீதிப் பிரிவு**

(1) **நீதி அதிகாரி - ஆண் /பெண் (நிரந்தர)** இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் மெஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மேல்

நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சேவை அனுபவம் இருத்தல் வேண்டும். ஆவணங்களை சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் தயாரிக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும். ஆங்கிலம் சரளமாக பேசுதல் ஆவணங்களை கையாளுதல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

**ஏ. பரிபாலன கால்நடை வைத்தியப் பிரிவு**

(1) **கால்நடை வைத்தியர் ஆண் (நிரந்தர)** மிருக வைத்தியராக BVSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான பட்டம் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்குகொள்ளப்பட்ட பட்டம் இருத்தல் வேண்டும்.

**ஐ. பரிபாலன கல்விப் பிரிவு**

(1) **ஆங்கில மொழி விரிவுரையாளர் - ஆண் / பெண் (நிரந்தர / தொண்டர்)** ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைகழகத்தால் ஆங்கிலத்தில் BA/ BSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலம் ஒரு பாடமாக MA/ Msc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழி மூலம் MA/ Msc பட்டம் பெற்றிருத்தலுடன் ஆங்கில மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும் அல்லது ஆங்கிலம் ஒரு பாடமாக BA/ BSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலத்தில் B.Ed அல்லது ஆங்கில மொழி மூலம் BA/ BSc பட்டம் பெற்றிருத்தலுடன் ஆங்கில மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி ஆசிரியர் பயிற்சியில் 06 மாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில மொழி தொடர்பான 3 வருட கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியாகியிருத்தல் அல்லது தேசிய கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர் கலாசாலையில் 2 வருட ஆங்கில மொழி தொடர்பான கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியாகியிருத்தல் ஆங்கில மொழி தொடர்பான 3 வருட கற்கைநெறி தேசிய கல்வித் திணைக்களத்தில் அல்லது வெளிநாட்டு நிறுவனத்தில் வெற்றிகரமாக பூர்த்தியாகியிருத்தல்.

(2) **பிரெஞ்சு மொழி /சீன மொழி விரிவுரையாளர் - ஆண் /பெண் (நிரந்தர /தொண்டர்)** பிரெஞ்சு/சீன மொழி தொடர்பான 1 வருட டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தியாகியிருப்பதுடன் அரசு அல்லது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் பிரெஞ்சு/ சீன மொழி ஆசிரியர் தொடர்பான 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

**ஒ. பரிபாலன இசை பிரிவு**

(1) இசைக் கலைஞர் மேலைத்தேய (Military Band) ஆண் (நிரந்தர) கலை பிரிவில் பட்டம் இருத்தல் வேண்டும் அல்லது டிப்ளோமா மேலைத்தேய இசையில் அல்லது வெளிவாரி டிப்ளோமா மேலைத்தேய இசையில் அல்லது றோயல் கல்லூரியில் அல்லது திரின்ரி கல்லூரியில் தரம் 5 வரை அல்லது அதற்கு மேலும் லண்டன் அல்லது அதற்கு சமனான தகைமை இருத்தல் வேண்டும்.

**ஓ. பரிபாலன கணக்காளர் பிரிவு**

(1) **கணக்காளர் அதிகாரி ஆண் (நிரந்தர)** இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வணிக / முகாமைத்துவ / கணக்கியல் மற்றும் வியாபார விழுமியம் தொடர்பான பட்டம் இருத்தல் வேண்டும். மேலும் கீழ் காணப்படும் ஏதேனும் துறைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட துறையில் தகைமை இருத்தல் வேண்டும்.

(2) இலங்கை பட்டய கணக்கியல் நிறுவனத்தில் சான்றுப்படுத்தப்பட்ட (CBA) வியாபார கணக்காளர் தகைமை இருத்தல் வேண்டும். அல்லது ஐக்கிய இராச்சியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தினால் பெற்ற தகைமை (CIMA) இருத்தல் வேண்டும். அல்லது இலங்கை முகாமைத்துவ கணக்கியல் நிறுவனத்தில் சான்றுப்படுத்தப்பட்ட (CMA) முகாமைத்துவ கணக்கியல் தகைமை இருத்தல் வேண்டும். அல்லது இலங்கை பொது நிதி கணக்கியல் சங்கத்தில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

**ஔ. தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு**

(1) வலையமைப்பு பரிபாலகர் அதிகாரி ஆண் /பெண் (நிரந்தர/தொண்டர்)
கணினி பொறியியல் பிரிவில் BSc பட்டம் இருத்தல் வேண்டும். கணினி தொடர்பான பிரிவில் BSc பட்டம் அல்லது கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடமாக BSc (NDES) பட்டம் அல்லது HND உயர் தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது தேசிய டிப்ளோமா தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது கணினி பொறியியல் விஞ்ஞானத்தில் பட்டம் இருத்தல் வேண்டும் வலையமைப்பு பரிபாலகர் சமனான தகைமை இருத்தல் வேண்டும்.

(2) மென்பொருள் விருத்தியாளர் ஆண் /பெண் (நிரந்தர /தொண்டர்) கணினி பொறியியல் பிரிவில் BSc பட்டம் இருத்தல் வேண்டும். கணினி தொடர்பான பிரிவில் BSc பட்டம் அல்லது கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடமாக BSc. (NDES) பட்டம் அல்லது HND உயர் தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது தேசிய டிப்ளோமா தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது கணினி பொறியியல் விஞ்ஞானத்தில் பட்டம் இருத்தல் வேண்டும். அல்லதுC#, ASP.Net 4.0 and above, WCF, MVC 5, Entity Framework, LINQ, Angular, Visual Studio 2015, Team Foundation Server (TFS), NET Core, Python, Big data analysis tools or MS SQL மென்பொருள் விருத்தியாளருக்கு அனுபவம் இருத்தல் வேண்டும்.

(3) தகவல் /பாதுகாப்பு விசேட நிபுணர் ஆண் /பெண் (நிரந்தர /தொண்டர்) கணினி பொறியியல் பிரிவில் BSc. பட்டம் இருத்தல் வேண்டும். கணினி தொடர்பான பிரிவில் BSc பட்டம் அல்லது கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடமாக BSc. (NDES) பட்டம் அல்லது HND உயர் தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது தேசிய டிப்ளோமா தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது கணினி பொறியியல் விஞ்ஞானத்தில் பட்டம் இருத்தல் வேண்டும். தகவல் / பாதுகாப்பு விசேட நிபுணர் சமனான ஒலி அறிவு இருத்தல் வேண்டும்.

(4) இணையதள வடிவமைப்பாளர் ஆண் /பெண் (நிரந்தர /தொண்டர்) கணினி பொறியியல் பிரிவில் BSc பட்டம் இருத்தல் வேண்டும். கணினி தொடர்பான பிரிவில் BSc பட்டம் அல்லது கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடமாக BSc. (NDES) பட்டம் அல்லது HND உயர் தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது தேசிய டிப்ளோமா தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது கணினி பொறியியல் விஞ்ஞானத்தில் பட்டம் இருத்தல் வேண்டும். HTML / XHTML / HTML 5, CSS (Cascade Style Sheet), JavaScript, JQuery, flash action script, PHP, MySQL, ASP.NET, MSSQL. அவை தொடர்பான அனுபவம் இருத்தல் வேண்டும்.

3. **அனுபவம்**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களின் தொழிற் தகைமை மற்றும் 02 வருட சேவை அனுபவம் இருப்பின் நேர்முகப் பரீட்சையின் போது விசேட கவனம் செலுத்தப்படும்.

4. **அடிப்படை தகைமைகள்.-**

அ. தேசிய இனம் :- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. குடியியல் நிலை :- விவாகமானவர்/விவாகமாகாதவர்

இ. பால் :- ஆண் /பெண் (தேவையை பொருத்து)

உ. வயது :- 2020, யூலை 15 ஆந் திகதிக்கு வயது 18-33 வரை இருத்தல் வேண்டும்

ஊ. உயரம் :-

| | |
|---|---|
| | ஆண்கள்-167.5 செ. மீ. (5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும்.) |
| | பெண்கள்- 162.5 செ. மீ. (5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்) |
| வைத்திய /பல் வைத்திய பிரிவு | ஆண்கள்-165 செ. மீ. (5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்.) |
| | பெண்கள்- 160 செ. மீ. (5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும்) |

எ. நிறை :- (ஆண்) 17 < உடற்பருமன் சுட்டி < 26
(பெண்) 17 < உடற்பருமன் சுட்டி < 25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி . கி.)}}{\text{உயரம் (மீ)}^2}$$

ஏ. மார்பு :- ஆண் 32" (குறைந்தது)

ஐ. பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

ஓ. தொலைபார்வை :-இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)
(தொழில்நுட்பம் அல்லாத பிரிவிற்கு மாத்திரம் இரண்டு கண்களிலும் 6/18 மூக்குக் கண்ணாடி பயன்படுத்தியும் 6/6 ஆக இருத்தல் வேண்டும்)

5. **விஷேட குறிப்பு**

(1) இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற் தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். தேவையான உயரம் இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிலைட் லெப்டினன்ட் அல்லது ப்ளையின் ஒப்பிசர் மற்றும் பைலட் ஒப்பிசர் நிலையில் அலுவலராக அவர்களின் தொழிற் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாக வான்படை தளபதியால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் எழுத்து, செயன்முறை மற்றும் அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

(4) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் இலங்கை வான்படை மருத்துவப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். வான்படை ஆளுநரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

(5) அனைத்துப் பட்டங்களும் டிப்ளோமாக்களும் இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

(6) தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

(7) விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

(8) அரசகரும மொழித் தேவைப்பாடுகள் :- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

(9) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை தளபதியால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்கு விதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

(10) இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிரல் 27 ஆந் திகதி 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உபசேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஆபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணை பெற்ற பதவி வழங்கப்படும். வான் படைச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் நியதிகளின்படி 'அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்.' ஆயின், ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான் படைச்சட்டத்தின் 11ஆம் பிரிவின் படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்து கற்கைநெறிகள்

தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டாது. வான் படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள் பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

(11) வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

(12) அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

(13) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(14) திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15(ஈ) (16) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

### 6. சம்பளமும் கொடுப்பனவுகளும்

அ. தற்போதிலிருந்து 2020 ஆம் வருடத்திற்கான ஏற்புடையதான அடிப்படைச் சம்பள விகிதங்கள் பின்வருமாறு:- மேற்குறிப்பிட்டவாறு இலங்கை வான் படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு - 2018 இல் இருந்து கிடைக்கப்பெரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது (ஆண்டொன்றுக்கு)

| வருடம் / பதவிநிலை | 2020 (வருடத்திற்கு) |
|---|---|
| பைலட் ஓபிசர் (மாணவ நுழைவு) | ரூபா 463,260.00 |
| பைலட்ஓபிசர் (மாணவ அல்லாத நுழைவு) | ரூபா 502,860.00 |
| ப்ளையின் ஓபிசர் | ரூபா 571,380.00 - (30×16,020) = ரூபா 1,051,980.00 |
| ப்ளைற் லெப்டினன்ட் | ரூபா 667,500.00 - (24×16,020) = ரூபா 1,051,980.00 |
| ஸ்குவாட்ரன் லீடர் | ரூபா 731,580.00 - (22×16,020) = ரூபா 1,084,020.00 |
| விங்க் கமாண்டர் | ரூபா 751,140.00 - (17×19,560) = ரூபா 1,083,660.00 |

### ஆ. வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளக் கொடுப்பனவு

| வருடம் / பதவி நிலை | 2020 (வருடத்திற்கு) |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | ரூபா 651,480.00 (2×16,020-7×16,140-2×19,560 - 16×26,040) = ரூபா 1,252,260.00 |
| தரம் II | ரூபா 699,660.00 (6×16,140-2×19,560- 16×26,040) = ரூபா 1,252,260.00 |
| தரம் I | ரூபா 861,660.00 (15×26,040) = ரூபா 1,252,260.00 |
| விஷேட பிரிவு | ரூபா 1,056,000.00 (12×32,400) = ரூபா1,444,800.00 |

இ. **பல்வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளக் கொடுப்பனவு**

| வருடம் / தரம் | 2020 (வருடத்திற்கு) |
|---|---|
| தரம் II | ரூபா 635,460.00 (3×16,020-7×16,140-2×19,560 - 16×26,040) = ரூபா 1,252,260.00 |
| தரம் I | ரூபா 861,660.00 (15×26,040) = ரூபா 1,252,260.00 |
| விஷேட பிரிவு | ரூபா 1,056,000.00 (12×32,400) = ரூபா 1,444,800.00 |

ஈ. **வைத்திய, பல்வைத்திய அதிகாரிகளுக்கான வேறு கொடுப்பனவுகள்**

(1) ஓய்வூதியக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு
ஆரம்பப் பிரிவு - ரூபா 1,700.00
தரம் II - ரூபா 1,700.00
தரம் I - ரூபா 3,400.00
விஷேட பிரிவு - ரூபா 3,400.00

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு மாதமொன்றுக்கு
ஆரம்பப் பிரிவு - ரூபா 2,125.00
தரம் II - ரூபா 1,700.00
தரம் I - ரூபா 400.00

(3) நட்ட கொடுப்பனவு மாதமொன்றுக்கு- ரூபா 35,000.00

(4) மேலதிக வேலை கொடுப்பனவு மணித்தியாலத்திற்கு

ஆரம்பப் பிரிவு - ரூபா 687.00
தரம் II - ரூபா 796.00
தரம் I - ரூபா 1,101.00
விஷேட பிரிவு - ரூபா 1,302.00

(5) மொழித்திறமை கொடுப்பனவு மணித்தியாலத்திற்கு
ஆரம்பப் பிரிவு - ரூபா 1,485.00
தரம் II - ரூபா 1,495.00
தரம் I - ரூபா 2,320.00
விஷேட பிரிவு - ரூபா 2,850.00

(6) தேவையைப் பொறுத்து பந்தி 6 (ஈ) உள்ள சேவைக் கொடுப்பனவு வழங்கப்படும்.

உ. **சேவைக் கொடுப்பனவுகள்-**

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800.00

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250.00 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி: மாதமொன்றுக்கு 620.00 வீதம்.

(4) விஷேட கொடுப்பனவு: யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,380.00.

(5) விஷேட கொடுப்பனவு: ரூபா 3,100.00

(6) இடைக்கால கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000.00. (இடைக்கால கொடுப்பனவானது 2019, வரவு செலவுத் திட்டத்திற்கு அமைவாக மாதமொன்றுக்கு ரூபா 2,500.00)

(7) சீருடை பேணுதல் படி ரூபா 525.00

(8) சேவையாளர் படி: மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்).

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 24,005.47 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால் ஒவ்வொரு நாட்களுக்கும் ரூபா 774.37வீதம்).

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் பைலற் ஆபீசர் இருந்து ஸ்கோர்டன் லீடர் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 3,200.00 இருந்து ரூபா 8,500.00 - வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(12) தொலைபேசிக் கட்டணம் விங்கமாண்டர் முதல் எயர் வைஸ் மார்ஷலுக்கு மாதமொன்றுக்கு ரூபா 3,200.00 இருந்து ரூபா 8,500.00.

(13) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறைப் புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், துணைவிக்கும் பிள்ளைகளுக்கும்)

(14) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொருதடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.

(15) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(16) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(17) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(18) சேவைக் கொடுப்பனவு ரூபா 300.00, ரூபா 400.00, ரூபா 500.00 (பல்வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக் காலத்தைப் பொறுத்து).

(19) மேலதிக கொடுப்பனவு ரூபா 1,500.00 (வைத்திய, பல்வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(20) 1/20 கொடுப்பனவு மாதமொன்றுக்கு - அடிப்படைச் சம்பளம் × 1/20 × 3 நாட்கள் மட்டும். (வைத்திய, பல்வைத்தியர்களுக்கு மாத்திரம்)

(21) மேலதிகக் கொடுப்பனவு 120 மணி ஒரு மாதத்திற்கு (வைத்திய, பல்வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(22) தொலைபேசிக் கொடுப்பனவு மாதாந்தம் -

| | | |
|---|---|---|
| விஷேட வைத்தியர் | ரூபா | 8,000.00 |
| வைத்தியர் | ரூபா | 4,000.00 |

7. ஓய்வூதியங்கள் /பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின் படியாகும்.

8. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்** -

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2020, மாச்சு 20 ஆந் திகதி நன்பகல் 12.00 மணிக்கு முன், "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, பிரதான ஆட்சேர்ப்பு அலுவலகம்" தொழிற்துறை பாடசாலை, இலங்கை விமானப்படை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர் விண்ணப்பம்

.................... பிரிவு'' எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

ஆ. அரசாங்கசேவையில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின் / குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்பப்படல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் பிரதிகளை நேர்முக பரீட்சையின் போது சமர்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் மூலப் பிரதி மற்றும் பிரதி (கல்விச்சட்டக்கோவையின் நோக்கத்திக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(2) தேசிய ஆள் அடையாள அட்டை மூலப் பிரதி மற்றும் பிரதி.

(3) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் மூலப் பிரதி மற்றும் பிரதி.

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில் / தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன் / அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) மூலப் பிரதி மற்றும் பிரதி

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்விகற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பக்காரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில்தருநரினதாக இருத்தல் வேண்டும்.

(6) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள் மூலப் பிரதி மற்றும் பிரதி

(7) வெற்று பயில் கவர் மற்றும் பயில் வேக்.

(8) வர்ணப் புகைப்படம் 2×2½ அங்குல அளவு கிராம அலுவலரினால் சான்றிதழ்படுத்தப்பட்டது.

ஈ. ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வு நாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

உ. ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

ஊ. விண்ணப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

9. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவு செய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவுசெய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

10. தெரிவு செய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன–

அ. மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையை பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச் சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

ஆ. நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதித் தெரிவுசெய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டாது.

இ. விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக் களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

ஈ. இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

உ. ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

ஊ. நிராகரிகப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டி. எல். எஸ். டயஸ்,
RWP, RSP and three Bars, VSV, USP, MSc
(Def & Strat Stu), ndc, psc,
எயார் மார்ஷல்,
வான் படைத் தளபதி.

தலைமையகம்,
இலங்கை வான் படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாணைபெற்ற அலுவலருக்கான விண்ணப்பப்படிவம்**
**இலங்கை நிரந்தர /தொண்டர் வான்படையில் . . . . . . . . . பிரிவில்**

1. தேசிய இனம்: ...........................................................................................................................
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் தேதியும் குறிப்பிடுக).
2. முழுப்பெயர் (தேசிய ஆள் அடையாள அட்டையில் உள்ளவாறு) :...........................................................................
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:-...................................................................................
4. விண்ணப்பிக்கும் துறை :-...................................................................................
5. விண்ணப்பிக்கும் பிரிவு :-...................................................................................
6. நிரந்தர முகவரி:-...........................................................................................................................
7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :- ...........................................................................................
8. பாடசாலை பற்றிய விபரங்கள் :-...................................................................................
9. அஞ்சல் முகவரி :-...................................................................................
10. E-Mail முகவரி :-...................................................................................
11. பிறந்த திகதி :- ...........................................................................................................................
(2020, யூலை 15 ஆந் திகதியன்று) வருடங்கள் ........................ மாதங்கள் ...................... நாட்கள் ...............
12. உயரம் :- சென்றி மீட்டரில் ............... (அடி ......................அங்குலம் .................. )
13. மாவட்டம் :...........................................................................................................................
14. தேர்தற் தொகுதி :-...........................................................................................................................
15. கிராம அலுவலர் பிரிவு:- ...................................................................................
16. தொலைபேசி இலக்கம்.:- ...........................................................................................
17. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா?:- ....................................................
18. பாடசாலை அத்துடன் / அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள்

| பாடசாலை / பல்கலைக்கழகம் பெயர்கள் | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலைகளும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க. பொ. த. (சா/த.)<br>க.பொ.த (உ/த.)<br>தொழில் தகைமைகள்<br>வேறு | | |

19. பாடசாலை /பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள்.-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் -

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

21. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----------------.

22. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----------------.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் தேதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

23. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (தேதிகளுடன் விபரத்தையும் தருக.) :----------------.

24. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----------------.

25. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----------------.

26. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா? அல்லது பிணையில் விடப்பட்டீரா? அப்படியாயின், விபரங்களை தருக:----------------.

27. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில், கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள் / அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----------------.

28. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் -

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

29. விண்ணப்பகாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை -

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் எனது அறிவுக்கும் விசுவாசத்துக்கும் ஏற்ப சரியானவை என உறுதிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்களுக்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

திகதி. . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
விண்ணப்பதாரரின் கையொப்பம்

02-703

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பின் III ஆம் தரம், I ஆம் வகுப்பின் II ஆம் தரம் மற்றும் I ஆம் வகுப்பின் I ஆந் தரத்தினைக் கொண்ட அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2018 (1) 2020

1.0 இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பின் III ஆம் தரம், I ஆம் வகுப்பின் II ஆம் தரம் மற்றும் I ஆம் வகுப்பின் I ஆந் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018 (1) 2020 பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2020, மாச்சு மாதம் 28 மற்றும் 2020, மாச்சு மாதம் 29 ஆகிய வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2.0 இப்பரீட்சை 1894/26 மற்றும் 2014.12.26 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடாத்தப்படும்.

3.0 மேற்குறிப்பிட்ட சேவைகளுக்கு உரித்துடையதாக நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை கீழ்வருமாறு அமையப்பெற்றுள்ளது.

| தொடரிலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 01. | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பின் III ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLICT 1 (III) |
| 02. | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLICT 1 (II) |
| 03. | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLICT 1 (I) |

4.0 இப்பரீட்சை தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இச்சட்டங்களை மீறுமிடத்து ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் ஆளாக நேரிடும்.

5.0 இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் இணையத்தளத்தின் ஊடாக நிகழ்நிலை முறையிலாகும் (Online) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இணையத்தளத்தில் இடது பக்கமிருக்கும் டயில் மெனு தாவலில் Examination இல் உள்நுழைவதன் ஊடாக தமக்குரிய பரீட்சையினைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பரீட்சை விண்ணப்பத்தினை நிரப்புவதற்கு முடியும். விண்ணப்பத்தினை நிரப்புதல் 2020.02.28 ஆந் திகதி மு. ப. 8.00 முதல் 2020.03.16 ஆந் திகதி நல்லிரவு 12.00 மணி வரையான காலப்பகுதியினுள் மட்டுமே முடியுமாக இருக்கும்.

6.0 **பரீட்சைக் கட்டணம்**.- முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும் இதற்குப் பின்னரான தடவைகளில் அலுவலர்களினால் ஒரு பாடத்துக்கு மேல் தோற்றுவதாயின் ரூபா 500.00 ஐ பரீட்சைக் கட்டணமாகவும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் கட்டணமாக ரூபா 300.00 இனையும் செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தினை இலங்கை பூராக அமைந்துள்ள எந்தவொரு தபாலகத்தின் மூலம் (உப தபாலகங்கள் தவிர) அல்லது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk ஊடாக கடன் அட்டை மூலமாக (Credit cards) 'SLIDA' விற்கு செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அச்செலுத்தலிற்கு உரித்துடைய பற்றுச்சீட்டின் இலக்கத்தினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த தபாலகத்தில் 'SLIDA' கணக்கிற்கு பணம் செலுத்துவதற்கு உள்நாட்டு மின் பணம் செலுத்தும் விண்ணப்பத்தினை (அ. அ. சீ 85 ஆம் இலக்கத்துடைய மாதிரிப்படிவத்தினை நிரப்பும் போது, பணத்தினைப் பெற்றுக்கொள்பவர் 'SLIDA' எனவும், பணத்தினைப் பெற்றுக் கொள்பவரின் முகவரி என்னும் இடத்தில் உமக்கு உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரினையும் குறிப்பிடவும்.) குறியீட்டுப் பெயர்கள் 03 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.

மேலும் கணக்கிற்கு பணம் செலுத்தும் போது பணத்தினை அனுப்புபவராக விண்ணப்பதாரியின் பெயரினையும், பணம் அனுப்புபவரின் முகவரி என்னும் இடத்தில் விண்ணப்பதாரியின் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தினையும், குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தினை நிரப்புதல் வேண்டும்.

7.0 Online முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்கள் Submit செய்ததன் பின்னர் உரிய விண்ணப்பதாரியிடம் உறுதிப்படுத்தும் இலக்கமொன்று (Confirmation Number) பெற்றுக்கொடுக்கப்படும் என்பதோடு அவ்விலக்கத்தினை எதிர்வரும் தொடர்பு நடவடிக்கைகளுக்காக விண்ணப்பதாரி தன்னகத்தே வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிரப்பப்பட்ட விண்ணப்பம் நிகழ்நிலையின் (Online) மூலம் அனுப்பியதன் பின்னர் கிடைக்கப்பெறும் இணையத்தளப் பக்கத்தில் காணப்படும் அறிவுரைகளைப் பின்பற்றுவதனால் தமக்குரிய பரீட்சை அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியும். அவ்வனுமதிப்பத்திரத்தினை அச்சிட்டு திணைக்கள தலைவர் அல்லது அவர் தன் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதி அலுவலரொருவர் மூலம் தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.0 விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிப்பது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் எழும் போது அது தொடர்பான விசாரணைக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக தொலைபேசி இலக்கமான 011-5980236 இற்கு 2020.02.28 ஆந் திகதி முதல் 2020.03.16 ஆந் திகதி வரை வார நாட்களில் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையில் அழைப்பினை மேற்கொள்ளலாம்.

9.0 பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்ற அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முடியுமான வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறையை பெற்றுக்கொடுத்தல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவசியப்படுமாயின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். பரீட்சைக்கு சமுகமளிப்பதற்கு பிரயாணக் கட்டணம் வழங்கப்படமாட்டாது.

10.0 **பரீட்சார்த்தியின் அடையாளம்**.- பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறுகின்ற விதத்தில் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஒன்றினை சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் படி இரத்துச் செய்ய முடியும்.

11.0 இப்பரீட்சை, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும் என்பதோடு குறித்த சேவைக்கு உள்வாங்கும் பரீட்சைக்கு தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் அல்லது இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். போட்டிப் பரீட்சையின்றி இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு தான் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற பரீட்சை மொழி மூலத்தினை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

12.0 தான் விரும்பிய ஒவ்வொரு பாடத்திற்கான வெவ்வேறு மற்றும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான தடவைகளில் தோற்ற அலுவலரினால் முடியும்.

13.0 பரீட்சை பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டதன் பின்னர்

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் பெறுபேறுகள் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அப்பெறுபேறுகளுக்கு ஏற்ப குறித்த திணைக்களத் தலைவர்கள் அலுவலர்களின் சேவையினை உறுதிப்படுத்தல் மற்றும் பதவியுயர்வு நடவடிக்கைகளுக்கான பரிந்துரை முன்வைக்கப்படல் வேண்டும்.

14.0 பரீட்சை நடைமுறைகள்: ஒவ்வொரு வினைத்திறன்காண் தடை தாண்டற் பரீட்சைக்கு தோற்ற முடியுமான அலுவலர்களுக்கான பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் கீழ்வருமாறு காணப்படுகின்றன.

14.1 இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பின் III ஆம் தரத்தையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பின் 13 ஆம் அட்டவணை). இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக அரச சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பின் III ஆம் தரத்தையுடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

| பாடங்கள் | பாட இலக்கம் | புள்ளி | காலம் | சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| தாபன விதிக்கோவையும் மற்றும் நிர்வாகமும் | 01 | 100 | 03 மணித்தியாலம் | 40 |
| நிதிப் பிரமாணமும் மற்றும் அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவமும் | 02 | 100 | 03 மணித்தியாலம் | 40 |
| முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் | 03 | 100 | 03 மணித்தியாலம் | 40 |

14.1.1 தாபன விதிக்கோவையும் மற்றும் நிர்வாகமும் (பாட இலக்கம் - 01)
கீழ்க் காணப்படும் விடயங்களை உள்ளடக்கியதோர் வினாப்பத்திரமாகும்.

(1) அலுவலகம் மற்றும் வெளிக்கள நடவடிக்கையினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஒழுங்கமைப்பு
(2) தாபன விதிக்கோவையின் கீழ்க் குறிப்பிடப்படும் அத்தியாயங்கள் I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII
(3) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்

இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களைக் கொண்டுள்ளது.

14.1.2 நிதிப் பிரமாணமும் மற்றும் அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவமும் (பாட இலக்கம் - 02)

கீழ்க் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையிலமைந்த வினாப்பத்திரமாகும்.

(அ) இலங்கையில் பிசுக்கால் ஆட்சி, அரச நிதி முகாமைத்துவம் தொடர்பிலான அறிக்கை அரசியலமைப்பின் ஏற்பாடுகள், அரச நிதி தொடர்பான பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, நிதியம் என்பதன் விளக்கம், திரட்டு நிதி மற்றும் அதன் செயற்பாடுகள், ஒதுக்கீட்டுக் கணக்கின் நோக்கங்கள் மற்றும் ஒதுக்கீட்டு முறைகள், எதிர்பாராப் பின்னிகழ்ச்சிச் செலவுநிதியம், பிற நிதியங்களும் அவற்றின் செயற்பாடுகளும், அரச வருமானங்கள், நிதி அமைச்சரின் தத்துவங்களும் பணிகளும், திறைசேரியின் தத்துவங்களும் பணிகளும் ஆணைச்சீட்டுக்களும், கட்டு நிதி அதிகாரமும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தத்துவங்களும் பணிகளும், அரசாங்க செலவினங்கள் மீதான குழு, அரசாங்க தொழில் முயற்சிகள் மீதான குழு.

(ஆ) கணக்கீட்டு உத்தியோகத்தர், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் வருவாய்க் கணக்கீட்டு அலுவலர்களை நியமித்தல், அவர்களின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) அரச செலவினங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், ஒழுங்கமைப்பின் நோக்கங்கள் மற்றும் பணிகளை இனங்காணல், அரசாங்க கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை இனங்காணல், அபிவிருத்தி செயற்திட்டங்கள், நிகழ்ச்சிகளைத் திட்டமிடல் மற்றும் மதிப்பிடுதல் மற்றும் முன்னிலைப்படுத்தல், வருடாந்த வருமானங்கள் மற்றும் செலவினம் பற்றிய மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதி முடிவினைப் பெறுதல்.

(உ) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்கள் செய்தல், வகைமாற்று நடவடிக்கைகளின் பிரயோகம், அரசாங்கப் பிரிவின் ஆளணியினர் மற்றும் சம்பள முகாமைத்துவம், மொத்தக் கிரய மதிப்பீடுகளும் மீளாய்வுகளும், குறைநிரப்பு மதிப்பீடும்.

(ஊ) அரசாங்க சொத்துக்களின் நட்டங்களும் மற்றும் விட்டுவிடுதல்களும்

(எ) நானாவித கணக்கு நடவடிக்கைகள்

(ஏ) அரசாங்க கட்டுப்பாடு பொருட்டு பணிகளினைக் கையளித்தல்

(ஐ) அரசாங்க நிதிகளின் பொறுப்பு மற்றும் வங்கிக் கணக்கு நடைமுறைகள்

(ஒ) அரசின் வழங்கற் செயற்பாட்டு நடைமுறைகள், பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளைப் பெற்றுக்கொள்ளல், பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் தொகுப்பு. நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் பணிகள், பெறுகை மதிப்பீட்டின் செயற்பாட்டு நடைமுறைகள், வெளிநாட்டு நன்கொடைகள் மீது செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களின் முகாமைத்துவம்.

இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களினை உள்ளடக்கியுள்ளது.

14.1.3 முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் (பாட இலக்கம் - 03)

கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களின் அடிப்படையில் அமைந்ததோர் வினாப்பத்திரமாகும்.

(அ) முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்பு பற்றிய கோட்பாடுகள்.

(ஆ) அக்கோட்பாடுகள் அரசப் பிரிவுகளில் தோற்றுவிக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள்

(இ) முகாமைத்துவம் தொடர்பான நவீன முறைமைகள் மற்றும் நுட்பங்கள்

இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களினை உள்ளடக்கியுள்ளது.

14.2 இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பின் II ஆந் தரத்துக்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை (சேவைப் பிரமாணக் குறிப்பின் 14 ஆம் அட்டவணை). இப்பரீட்சையில் தோற்றுவதற்காக அரச சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பின் II ஆந் தரத்தினையுடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

<table>
<tr><th colspan="2">பாடங்கள்</th><th>பாட இலக்கம்</th><th>புள்ளி</th><th>காலம்</th><th>சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்</th></tr>
<tr><td colspan="2">அலுவலக முகாமைத்துவம்</td><td>04</td><td>100</td><td>1 மணித்தியாலயம்</td><td>40</td></tr>
<tr><td rowspan="2">ஈ-அரசாங்க எண்ணக்கரு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம்</td><td>I ஆம் வினாப்பத்திரம் - பல்தேர்வு</td><td>05-I</td><td>40</td><td>1 மணித்தியாலயம்</td><td>16</td></tr>
<tr><td>II ஆம் வினாப்பத்திரம் - கட்டுரை</td><td>05-II</td><td>60</td><td>1 மணித்தியாலயம்</td><td>24</td></tr>
</table>

14.2.1 அலுவலக முகாமைத்துவம் (பாட இலக்கம் - 04)

அரசாங்கப் பிரிவின் அலுவலகம் மனித மற்றும் பௌதீக வளங்களின் முகாமைத்துவம் தொடர்பாக வழங்கப்படும் விடய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு பதிலளித்தல்.

14.2.2 ஈ - அரசாங்க எண்ணக்கரு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் (பாட இலக்கம் - 05)

(அ) I ஆம் வினாப்பத்திரம் - பல்தேர்வு (பாட இலக்கம் 05-1) ஈ- அரசாங்க முறையின் பரிணாமம், அதன் காலங்கள், ஈ- அரசாங்க அடிப்படைப் பிரிவுகள், ஈ-அரசாங்க சேவைகள் (E-service) மற்றும் ஈ-அரசாங்க கருத்திட்டங்கள், அரசாங்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் கட்டுமானம், ஈ-அரசாங்க முறைமையை வெற்றியடையச் செய்வதற்கான உறுதியான காரணிகள், ஈ-அரசாங்க முகாமைத்துவம், இணைந்து செயலாற்றும் தன்மை (Inteoperability) மற்றும் சேவை சார்ந்த கணினி வடிவமைப்பு (Service Oriented Architecture) ஈ-அரசாங்க முறை (E-Government) எண்ணக்கருவினுள் உள்ளடக்கப்படும்.

(ஆ) II ஆம் வினாப்பத்திரம் - கட்டுரை (பாட இலக்கம் 05-II) தகவல் தொழில்நுட்பத்தின் வாழ்க்கை வட்டம், அதன் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலுமான முக்கியத்துவம் மற்றும் அதற்கு தேவைப்படும் வளங்களின் விஷேட தன்மை, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், தகவல் தொழில்நுட்ப வளங்களின் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்ப செயற்திட்டங்களின் இடர்கள் மற்றும் அவற்றினைக் குறைத்துக் கொள்ளல் என்பன தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தினில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

14.3 இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பின் I ஆந் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை (சேவைப் பிரமாணக் குறிப்பின் 15 ஆம் அட்டவணை). இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக அரசாங்க சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பின் I ஆந் தரத்துடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

| பாடங்கள் | | பாட இலக்கம் | புள்ளி | காலம் | சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்றிட்டம் | I செயற்றிட்ட அறிக்கை | 06-I | 60 | - | 30 |
| | II செயற்றிட்ட அறிக்கையை சமர்ப்பித்தல் | 06-II | 40 | பரீட்சைக் குழுவிடம் சமர்ப்பிப்பதற்கும் விடையளித்தலுக்கும் 30 நிமிடங்கள் | 20 |

14.3.1 செயற்றிட்ட அறிக்கை (பாட இலக்கம் - 06 - I)
இலங்கையின் அரச துறை அலுவலகங்களது வினைத்திறனை அதிகரிப்பதற்காக நடைமுறையில் உட்படுத்தக்கூடிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய 15000 சொற்களுக்குக் குறையாத (பதினைந்தாயிரம்) செயற்றிட்ட அறிக்கையொன்றைத் தயாரித்தல்.

14.3.2 செயற்றிட்ட அறிக்கையை சமர்ப்பித்தல் (பாட இலக்கம் - 06 - II)
பரீட்சைக்குழுவிடம் சமர்ப்பித்தலும் பரீட்சைக் குழுவால் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு விடையளித்தலும்.

ஒவ்வொரு பரீட்சை மற்றும் பாடத்தினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நேர அட்டவணை கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடங்கள் | பாட இலக்கம் | திகதி | நேரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை தகவல் தொடர் பாடல் தொழில்நுட்பச் சேவை யின் I ஆம் வகுப்பின் III ஆம் தரத்துடைய அலுவலர் களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சை | தாபன விதிக்கோவையும் மற்றும் நிர்வாகமும் | 01 | 2020.03.28 | மு. ப. 9.00- மதியம் 12.00 |
| | | நிதிப் பிரமாணமும் மற்றும் அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவமும் | 02 | 2020.03.28 | பி.ப. 12.30- பி.ப. 3.30 |
| | | முகாமைத்துவம் மற்றும் தாபனங்கள் | 03 | 2020.03.29 | மு. ப. 9.00- மதியம் 12.0 |

| *தொடர் இலக்கம்* | *பரீட்சையின் பெயர்* | *பாடங்கள்* | | *பாட இலக்கம்* | *திகதி* | *நேரங்கள்* |
|---|---|---|---|---|---|---|
| 02 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பின் II ஆம் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சை | அலுவலக முகாமைத்துவம் | | 04 | 2020.03.29 | மு.ப.9.00- மு. ப. 10.00 |
| | | இ-அரசாங்க எண்ணக்கரு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத் துவம் | I ஆம் வினாப் பத்திரம் - பல் தேர்வு | 05-I | 2020.03.29 | மு.ப. 10.30- பி. ப. 12.30 |
| | | | II ஆம் வினாப் பத்திரம் - கட்டுரை | 05-II | | |
| 03 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பின் I ஆம் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சை | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்றிட்டம் | செயற்றிட்ட அறிக்கை | 06-I | செயற்றிட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் கையளிக்கும் திகதி தொடர்பாகவும் செயற்றிட்ட அறிக்கை சமர்ப்பிப்பது தொடர்பாகவும் விண்ணப்பப்படிவம் கையளிக்கும் இறுதித் திகதிக்குப் பின் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும். *கவனிக்கவும்.*- 2018.03.16 ஆந் திகதிய 2063 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வகுப்பு I தரம் I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டு ஆனால் இதுவரையும் அப்பரீட்சை நடத்தப்படவில்லை ஆதலால், அப் பரீட்சைக்கு விண்ணப்பித்த அலுவலர் இப்பரீட்சைக்காக மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. | |
| | | | செயற்றிட்ட அறிக்கையை சமர்ப்பித்தல் | 06-II | | |

15.0 இவ் அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

16.0 இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

எஸ். ஹெட்டியாரச்சி,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2020, பெப்புருவரி 14.

02-669

---

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆம் தரம், 3 ஆம் வகுப்பின் II ஆம் தரம் 3 ஆம் வகுப்பின் I ஆம் தரம், 2 ஆம் வகுப்பின் II ஆம் தரம் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரம் என்பவற்றின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் - 2018 (1) 2020

1.0 இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆம் தரம், 3 ஆம் வகுப்பின் II ஆம் தரம் மற்றும் 3 ஆம் வகுப்பின் I ஆம் தரம், 2 ஆம் வகுப்பின் II ஆம் தரம் மற்றும் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரம் என்பவற்றின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை - 2018 (1) 2020 பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2020, மாச்சு மாதம் 28 மற்றும் 2020, மாச்சு மாதம் 29 ஆகிய வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2.0 (அ) இப்பரீட்சை 1894/26 மற்றும் 2014.12.26 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடாத்தப்படும்.

(ஆ) முன்னரான பதவியின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் வினைத்திறன் காண் தடைகள் தொடர்பாக குறிப்பிடாதவிடத்து அல்லது நியமனக் கடிதத்தில் வினைத்திறன் காண் தடைகள் தொடர்பாக குறிப்பிடாதவிடத்து அவற்றை பூர்த்தி செய்யாத அலுவலர்கள் இருப்பின் உரிய வகுப்பில் உரிய தரத்திற்கு ஏற்புடையதான வினைத்திறன்காண் தடைகளை மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேவைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் மூன்று ஆண்டு (03) சலுகை காலப் பகுதியினுள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

3.0 மேற்படி குறித்த சேவைகளுக்கு ஏற்புடையதாக நடாத்துவதற்கு உரியதான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை பின்வருமாறு ஆகும்.

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 01. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆம் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT 3 III |
| 02. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT 3 II |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 03. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் I ஆம் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT 3 I |
| 04. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT 2 II |
| 05. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT 2 I |

4.0 இப்பரீட்சை தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். இச்சட்டங்களை மீறினால் ஒழுக்காற்று அதிகாரியால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

5.0 இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் இணையத்தளத்தின் ஊடாக நிகழ்நிலை முறையிலாகும் (Online) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இணையத்தளத்தில் இடது பக்கமிருக்கும் டயில் மெனு தாவலில் Examination இல் உள்நுழைவதன் ஊடாக தமக்குரிய பரீட்சையினைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பரீட்சை விண்ணப்பத்தினை நிரப்புவதற்கு முடியும். விண்ணப்பத்தினை நிரப்புதல் 2020.02.28 ஆந் திகதி மு. ப. 8.00 முதல் 2020.03.16 ஆந் திகதி நல்லிரவு 12.00 மணி வரையான காலப்பகுதியினுள் மட்டுமே முடியுமாக இருக்கும்.

6.0 பரீட்சைக் கட்டணம்.- முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும் இதற்குப் பின்னரான தடவைகளில் அலுவலர்களினால் ஒரு பாடத்துக்கு மேல் தோற்றுவதாயின் ரூபா 500.00 ஐ பரீட்சைக் கட்டணமாகவும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் கட்டணமாக ரூபா 300.00 இனையும் செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தினை இலங்கை பூராக அமைந்துள்ள எந்தவொரு தபாலகத்தின் மூலம் (உப தபாலகங்கள் தவிர) அல்லது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk ஊடாக கடன் அட்டை மூலமாக (Credit cards) 'SLIDA' விற்கு செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அச்செலுத்தலிற்கு உரித்துடைய பற்றுச்சீட்டின் இலக்கத்தினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த தபாலகத்தில் 'SLIDA' கணக்கிற்கு பணம் செலுத்துவதற்கு உள்நாட்டு மின் பணம் செலுத்தும் காசுக்கட்டளை விண்ணப்பத்தினை (அ. அ. சீ 85) ஆம் இலக்கத்துடைய மாதிரிப்படிவத்தினை நிரப்பும் போது, பணத்தினைப் பெற்றுக்கொள்பவர் 'SLIDA' எனவும், பணத்தினைப் பெற்றுக் கொள்பவரின் முகவரி என்னும் இடத்தில் உமக்கு உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரினையும் குறிப்பிடவும். (குறியீட்டுப் பெயர்கள் 03 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.)

மேலும், கணக்கிற்கு பணம் செலுத்தும் போது பணத்தினை அனுப்புபவராக விண்ணப்பதாரியின் பெயரினையும், பணம் அனுப்புபவரின் முகவரி என்னும் இடத்தில் விண்ணப்பதாரியின் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தினையும், குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தினை நிரப்புதல் வேண்டும்.

7.0 கணினியுடன் நேரடித் தொடர்பு மூலம் (Online) பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்களை Submit செய்த பின்னர் உரிய விண்ணப்பதாரியிடம் உறுதிப்படுத்தும் இலக்கம் (Confirmation Number) வழங்கப்படுவதுடன், அதனை எதிர்காலத்தில் விபரம் அறியும் நடவடிக்கைகளின் பொருட்டு விண்ணப்பதாரி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பதாரியால் உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் கணினியுடன் நேரடித் தொடர்பு மூலம் (Online) சமர்ப்பித்த பின்னர் இணைய தளத்தில் உள்ள ஆலோசனைகளை கடைபிடிப்பதன் மூலம் தமக்குரிய பரீட்சை அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளலாம். குறித்த அனுமதி அட்டையை அச்சிடப்பட்டு திணைக்களத் தலைவர் அல்லது அவரால் தமது அதிகாரத்தை கையளித்துள்ள பிரதிநிதித்துவ அலுவலரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.0 விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நடைமுறை தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படின் அது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும். 2020.02.28 ஆந் திகதி தொடக்கம் 2020.03.16 ஆந் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் மு. ப. 8.30 தொடக்கம் பி. ப. 4.30 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

9.0 பரீட்சை அனுமதி அட்டை பெற்றுள்ள அலுவலர்கள் பரீட்சையில் தோற்றக்கூடியதாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்த உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளலாம். பரீட்சைக்கு சமுகமளித்தலின் பொருட்டு பிரயாணச் செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

10.0 பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் பொருட்டும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடைகின்றவாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் எழுத்தாவணங்களில் ஒன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களை சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் பிரகாரம் இரத்துச் செய்யலாம்.

11.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன், உரிய சேவையில் சேர்வதற்காக பரீட்சைக்கு தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அலுவலர்களுக்கு முடியும். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்கு சேர்ந்த அலுவலலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்கு தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12.0 தான் விரும்புகின்றவாறு ஒவ்வொரு பாடங்களுக்கும் வெவ்வேறாகவும், ஒவ்வொன்றுக்கு வேறுபட்ட அமர்வுகளிலும் தோற்றுவதற்கு அலுவலர்களுக்கு முடியும்.

13.0 பரீட்சை பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கிய பின்னர். இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் பெறுபேறுகளை பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அந்த பெறுபேறுகளின்படி திணைக்களத் தலைவர்கள் அலுவலர்களின் சேவை நிரப்பப்படுத்தல் மற்றும் தரமுயர்வுகள் என்பவற்றுக்கான பரிந்துரைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

14.0 பரீட்சை திட்டம்: ஒவ்வொரு வினைத்திறன்காண் தடை தாண்டற் பரீட்சையின் பொருட்டும் தோற்றுகின்ற அலுவலர்களுக்கான பாடங்களும் பாடவிதானங்களும் பின்வருமாறாகும்.

14.1 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆம் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பில் 8 ஆம் அட்டவணை). இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையில் 3 ஆம் வகுப்பின் III ஆம் தரத்தில் உள்ள அலுவலராதல் வேண்டும்.

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| தாபன விதிக்கோவையும் மற்றும் நிர்வாகமும் | 01 | 100 | 01 மணித்தியாலம் | 40 புள்ளிகள் |
| நிதி ஒழுங்குவிதிகள் | 02 | 100 | 01 மணித்தியாலம் | 40 புள்ளிகள் |

14.1.1 தாபன விதிக்கோவை (பாட இலக்கம் - 01)
தாபன விதிக் கோவை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பாக அரச அலுவலருக்குரிய அடிப்படை அறிவை பரீட்சித்தல் இதன் போது எதிர்பார்க்கப்படுகின்றது. வினாத்தாள் சுருக்கமான வினாக்களையும் கட்டமைவு முறையிலான வினாக்களையும் கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.1.2 நிதி ஒழுங்குவிதிகள் (பாட இலக்கம் - 02)
அரசாங்க அலுவலகங்களில் பிரயோகிக்கின்ற நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு புத்தகங்களில் அலுவல்கள் தொடர்பான அறிவு மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான

அடிப்படை அறிவை அளவிடுதல் எதிர்பார்க்கப்படுகிறது. வினாத்தாள் சுருக்கமான வினாக்களையும் கட்டமைவு முறையிலான வினாக்களையும் கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.2 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பில் 9 ஆம் அட்டவணை). இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்பச் சேவையில் 3 ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் உள்ள அலுவலராதல் வேண்டும்.

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. அலுவலக முறைகள் மற்றும் நடைமுறை திட்டம் | 03 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 04 | 100 | 03 மணித்தியாலம் | 40 |

14.2.1அலுவலக முறைகள் மற்றும் நடைமுறை திட்டம் (பாட இலக்கம் - 03)
அரசாங்க அலுவலகங்களில் பிரயோகிக்கும் அலுவலக முறைகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவை பரீட்சித்தல் மற்றும் அவற்றை பிரயோகிப்பதில் உள்ள ஆற்றலை பரீட்சித்தலும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வினாத்தாள் கட்டமைவு முறையிலான வினாக்களை கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.2.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (பாட இலக்கம் - 04)
அரசாங்க அலுவலகங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பொதுவான எண்ணக்கருக்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை சிறந்த முறையில் பிரயோகித்தல் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்.

(அரசாங்க நிறுவனங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பிரயோகிக்கும் முறை, கணினி வலையமைப்பு, தரவு தொடர்பாடல் தொடர்பான சிறந்த அறிவு, பொதுவான நோக்க மென்பொருள் தொடர்பான அறிவு, விசேடமாக பயன்படுத்தும் மென்பொருள், தரவு பாதுகாப்பும் மென்பொருள்களின் பாதுகாப்பும் கணினி முறைகளில் தொடர்ச்சியாக சேவை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தரவு பாதுகாப்பை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள முடியுமான அடிப்படை நடைமுறைகள்)

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - பல்தேர்வு வினாத்தாளாகும். காலம் 01 மணித்தியாலம். (40 புள்ளிகள்)
பகுதி II - காலம் 02 மணித்தியாலங்கள் (60 புள்ளிகள்)

14.3 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் I ஆம் தரத்தில் உரியதான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பில் 10 ஆம் அட்டவணை). இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்பச் சேவையில் 3 ஆம் வகுப்பின் I ஆம் தரத்தில் உள்ள அலுவலராதல் வேண்டும்.

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (எழுத்திலான பரீட்சை) | 05 | 50 | 01 மணித்தியாலம் | 20 |
| 2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (செய்முறையிலான பரீட்சை) | 06 | 50 | 01 மணித்தியாலம் | 20 |

14.3.1 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் - எழுத்திலான பரீட்சை (பாட இலக்கம் - 05)

(i) அலுவலக நடவடிக்கைகளின் பொருட்டு மென்பொருள் பிரயோகமும் அது தொடர்பான அறிவும்;
(ii) கணினி வலையமைப்பு தொடர்பான அறிவு
(iii) கணினி மென்பொருள்களின்/வன்பொருள்களின் கோளாறுகளை அடையாளம் காணல், மற்றும் அவற்றை தீர்த்தல் தொடர்பான அறிவு.

இவ்வினாத்தாள் சுருக்கமான வினாக்கள் மற்றும் கட்டுரை முறையிலான வினாக்களை கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.3.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் - செயன்முறைப் பயிற்சி (பாட இலக்கம் - 06)

(i) அலுவலக நடவடிக்கைகளின் போது மென்பொருள் பயன்பாடு தொடர்பான நடைமுறை அறிவு;
(ii) கணினி வலையமைப்பு தொடர்பான நடைமுறை அறிவு
(iii) கணினி மென்பொருள்கள்/வன்பொருள்கள் என்பவற்றில் குறைபாடுகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றை தீர்ப்பதற்கான நடைமுறை அறிவு.

14.4 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் உரியதான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பில் 11 ஆம் அட்டவணை). இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்பச் சேவையில் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் உள்ள அலுவலராதல் வேண்டும்.

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 1. தாபன விதிக்கோவை | 07 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 2. நிதிப் பிரமாணங்கள் | 08 | 100 | 02 மணித்தியாலம் | 40 |

14.4.1 தாபன விதிக் கோவை (பாட இலக்கம் - 07)

தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள்/ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பாக அலுவலரிடம் காணப்படுகின்ற பொதுவான அறிவையும், அவ்வறிவை நடைமுறை ரீதியாகப் பயன்படுத்தத்தக்க ஆற்றலும் இதன்போது பரிசீலிக்கப்படும். தாபன விதிக் கோவையின் I ஆவது, II ஆவது பாகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அத்தியாயங்களிலிருந்தும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது நடைமுறை விதிகளிலிருந்தும் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இவ்வினாப்பத்திரமானது குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.4.2 நிதிப்பிரமாணங்கள் (பாட இலக்கம் - 08)

அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்ற நிதிப் பிரமாணங்கள் தொடர்பான அறிவு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு பதிவேடுகளினது நடவடிக்கைகள் தொடர்பான விளக்கம் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அறிவு என்பன மதிப்பீடு செய்யப்படும். இவ்வினாப்பத்திரமானது குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.4 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்தில் உரியதான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பில் 12 ஆம் அட்டவணை). இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்பச் சேவையில் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்தில் உள்ள அலுவலராதல் வேண்டும்.

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 1. அலுவலக முறைகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் | 09 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஈ-அரசு | 10 | 100 | 02 மணித்தியாலம் | 40 |

14.5.1 அலுவலக முறைகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் (பாட இலக்கம் - 09)
அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற அலுவலக முறைகள் தொடர்பான பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் ஆற்றல் என்பன பரிசீலிக்கப்படும். இவ்வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்கள், குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.5.2 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஈ - அரசு (பாட இலக்கம் - 10)
இவ்வினாப்பத்திரமானது இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - பல்தேர்வு வினாத்தாளாகும். காலம் 01 மணித்தியாலம். (40 புள்ளிகள்)

பகுதி II - கட்டமைப்பு முறையிலான கட்டுரை வினாத்தாளாகும் காலம் 02 மணித்தியாலங்கள் (60 புள்ளிகள்)
(எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்)

இவ்வினாப்பத்திரமானது கீழே காட்டப்பட்டுள்ள விடயப் பரப்பை உள்ளடக்கியவாறு தயாரிக்கப்படும்.

(அ) தகவல் தொழில்நுட்ப கருத்திட்ட சுற்றோட்டத்தின் அடிப்படை பகுதிகளான முறைமைகள், கற்கை, கட்டமைப்பு பகுப்பாய்வு, கட்டமைப்பு உருவாக்கம், அதற்கான மென்பொருள் உருவாக்கம், அவற்றைப் பரிசீலித்தல், பயன்படுத்துனரைப் பெற்றுக்கொள்ளும் பரிசோதனைகள், என்பனவும் அவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்பத் துறைகளான, அல்கோரிதம், HTML, XTML, php, தரவு மற்றும் தகவல் பாதுகாப்பு, இடர் காரணமாக மீளவும் கட்டமைப்புக்களைத் தாபித்தல், புலமைச் சொத்துரிமை மற்றும் மென்பொருள் அனுமதிப்பத்திரம், சுதந்திர மற்றும் திறந்த மூலங்களிலான மென்பொருள்கள், இணைய 2.0 என்பன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவிற்குள் உள்ளடக்கப்படும்.

(ஆ) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அரச துறையில் பயன்படுத்தும் முறைகள், அரச துறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மிக வினைத்திறனான சேவைகளை வழங்குதல், ஈ-அரச முறைமைகளுக்குத் தேவையான அடிப்படை தொழில்நுட்ப தேவைப்பாடுகள், அரச தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஆகக்கூடிய கட்டமைப்பிற்கான அடிப்படை அம்சங்கள், ஈ-அரச கட்டமைப்பிற்கான அடிப்படை அம்சங்கள். Inter-operability என்பன ஈ-அரசு என்ற பகுதிக்குள் உள்ளடக்கப்படும்.

ஒவ்வொரு பரீட்சையினதும் ஒவ்வொரு பாடங்களும், நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கால அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆம் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சை | தாபன விதிக்கோவை | 01 | 2020.03.29 | மு. ப. 9.00- மு.ப. 10.00 |
| | | நிதிப் பிரமாணம் | 02 | 2020.03.29 | மு.ப. 10.30- மு.ப. 11.30 |
| 02 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் II ஆம் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சை | அலுவலக முறைகள் மற்றும் நடைமுறைகள் | 03 | 2020.03.28 | பி.ப.12.30 - பி. ப. 2.30 |
| | | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 04 | 2020.03.28 | மு.ப. 9.00- பி. ப. 12.00 |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 03 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 3 ஆம் வகுப்பின் I ஆம் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சை | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (எழுத்துமூலப் பரீட்சை) | 05 | 2020.03.28 | மு.ப. 9.00 - மு. ப. 10.00 |
| | | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (செயன்முறைப் பரீட்சை) | 06 | 2020.03.28 | மு.ப.10.30 - மு. ப. 10.00 |
| 04 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சை | தாபன விதிக்கோவை | 07 | 2020.03.29 | மு. ப. 9.00 - மு. ப. 11.00 |
| | | நிதிப் பிரமாணம் | 08 | 2020.03.29 | மு. ப. 11.30 - பி. ப. 1.30 |
| 05 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சை | அலுவலக முறைகளும் நடைமுறைகளும் | 09 | 2020.03.29 | பி. ப. 12.30 - பி. ப. 2.30 |
| | | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஈ - அரசு | 10 | 2020.03.29 | மு. ப. 9.00 - பி. ப. 12.00 |

15.0 இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும், இணைந்த சேவைகள் பணிப்பாளரது தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

16.0 இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

எஸ். ஆலோக்க பண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2020, பெப்புருவரி 14.

02-670

---

## தொலைத்தொடர்பு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டு அமைச்சு

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

**விளையாட்டு டிப்ளோமா பாடநெறி - 2020/21**

தொலைத்தொடர்பு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டு அமைச்சின்கீழ் உள்ள தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் சிங்கள மொழி மூலம் நடாத்தப்படும் விளையாட்டு டிப்ளோமா பாடநெறியினைப் பயிலுவதற்காக வயது 18-35 (அரச சேவையில் பணியாற்றுவோரின் வயது 45 வருடங்களினைவிட மேற்படாது இருத்தல் வேண்டும்.) வருடங்களுக்கு இடைப்பட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

1.1 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/எண்கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் 3 பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும், அவர்,

(அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான கல்லூரி ஒன்றில் ஆகக்குறைந்தது 06 மாத பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல் ;

அல்லது

(ஆ) முப்படைகள், பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்புப் பிரிவின் பயிற்சி வழங்கும் நிறுவனமொன்றில், கல்லூரியில் விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல் ;

அல்லது

(இ) பாடசாலை விளையாட்டு ஆசிரியராக அல்லது ஆசிரியையாக அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றில் விளையாட்டு நில ஆலோசகராக ஆகக்குறைந்தது 5 வருட அனுபவத்துடன் விளையாட்டுத்துறையில் விசேட ஆற்றல்களை வெளிக்காட்டியிருத்தல் ;

அல்லது

(ஈ) யாதேனும் விளையாட்டு தொடர்பாக தேசிய விளையாட்டுக் குழுவொன்றின் அங்கத்தவராக இருக்க வேண்டியதுடன் யாதேனும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியிருத்தல் ;

அல்லது

(உ) விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் மாவட்ட மட்டப் போட்டியொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றிருத்தல். அவ்வாறு இல்லாவிடின் தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் நடாத்தப்படும் தேசிய மட்டப் போட்டியொன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல்.

1.2 உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**2. விண்ணப்பப்படிவங்களை அனுப்பவேண்டிய முறை :**

2.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் 8" x 13 1/2" அளவுடைய கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைத் தமது சொந்தக் கையெழுத்தினால் பூர்த்திசெய்து 2020.03.27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், இல. 100/ 7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும் ;

2.2 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறி - 2020 தொடர்பான விண்ணப்பப்படிவம்" எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும் ;

2.3 அரச, உள்ளூராட்சி சேவை மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திணைக்களத்தின்/ நிறுவனத்தின் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3. **தேர்ந்தெடுக்கும் முறை**.- இப்பாடநெறி தொடர்பாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அனைவரும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவதுடன் ஆட்சேர்ப்புக் குழுவினால் தீர்மானிக்கப்படும் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கும், உடற் தகைமைகாண் செயன்முறைப் பரீட்சை ஒன்றிற்கும் அழைக்கப்பட்டதன் பின்னர் பாடநெறிக்காகத் தெரிவுசெய்யப்படுவர்.

4. **பாடநெறி தொடர்பான விபரங்கள் :**

4.1 பாடத்திட்டமானது கீழ்குறிப்பிடப்பட்டவாறு 5 பிரிவுகளை உள்ளடக்கியதாகும் :

(அ) பயிற்றுவித்தலின் பொதுக் கோட்பாடுகள்.- உடற் தகைமைகள் மற்றும் திறன்கள், நுட்பமுறைகள், உபாய வழிகள், பயிற்சி முறைகள், திட்டமிடல் முறைகள், பயிற்சிச் சுமை மற்றும் பரீட்சித்தல் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் வாய்மொழி மூலப் பரீட்சை என்பனவற்றை உள்ளடக்கியதாகும் ;

(ஆ) ஆகக்குறைந்தது 10 விளையாட்டுக்கள் தொடர்பான கோட்பாட்டு மற்றும் செயன்முறை அறிவு ;

(இ) சுவட்டு மற்றும் மைதான மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் பற்றிய நிபுணத்துவம் ;

(ஈ) சுவட்டு மற்றும் மைதான மெய்வல்லுநர் விளையாட்டுகளுக்கு மேலதிகமாக விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறிக் காலத்தின்போது பெண்கள் அல்லது ஆண்களின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான விதத்தில் தெரிவுசெய்துகொள்ளும் ஓர் விளையாட்டு தொடர்பான நிபுணத்துவம் ;

(உ) விளையாட்டு உடற் கூற்றியல், விளையாட்டுச் சமூகவியல், விளையாட்டு நிர்வாகம், விளையாட்டுப் புள்ளிவிபரவியல், விளையாட்டு விழாக்களை ஏற்பாடு செய்யும் முறைகள், விளையாட்டு மருத்துவவியல், விளையாட்டு உயிரியல் இரசாயனவியல், விளையாட்டுப் போசணை மற்றும் விளையாட்டு உளவியல் போன்ற பொது விடயங்கள் தொடர்பான அறிவு.

4.2 பாடநெறியின் கால எல்லை 12 மாதங்களாகும் ;

4.3 இப்பாடநெறியின் பொருட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களால் 60,000 ரூபாவை பாடநெறிக் கட்டணமாக பாடநெறியானது ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியதுடன் பாடநெறிக்கான கட்டணத்தினைச் செலுத்தி நிறைவுசெய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளப்படுவர். அவ்வாறே இப்பணமானது காசோலையாக செலுத்தப்படுமாயின் "செயலாளர், தொலைத்தொடர்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டு அமைச்சு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். மேற்படி பணமானது எக்காரணங்கொண்டும் மீள அளிக்கப்பட மாட்டாது ;

4.4 பாடநெறியினைப் பயிலுவதற்குத் தெரிவுசெய்யப்படுவோர் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் சட்டதிட்டங்களினையும் பிரமாணங்களினையும் கடைப்பிடிப்பதற்குக் கட்டுப்படுதல் வேண்டும் ;

4.5 பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்பவர்களுக்கு "விளையாட்டு டிப்ளோமா" சான்றிதழ் வழங்கப்படும்.

5. **ஏனைய நிபந்தனைகள் :**

5.1 பாடநெறியின் முடிவில் தொழில் ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு இவ்வமைச்சு பணிக்கப்படவில்லை ;

5.2 இருப்பினும் பாடநெறியினைப் பயில்பவர்கள் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளருடன் உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொள்ளல் வேண்டுமென இவ்வமைச்சு கருதும் பட்சத்தில் அவ்வுடன்படிக்கைக்கு உடன்படுவதற்கு பாடநெறியைப் பயிலுபவர்கள் கட்டுப்படல் வேண்டும் ;

5.3 தற்போதுள்ள உயர் தகைமையினை அல்லது கோரப்பட்டுள்ள தகைமையினை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டியதுடன் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்படாத தரவுகள் பின்னர் முன்வைக்கப்படினும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது ;

5.4 இங்கு குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் இருக்குமாயின் அவை தொடர்பாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனப் பணிப்பாளரின் அபிப்பிராயத்தின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்.

இல. 100/7, சுதந்திர மாவத்தை,
கொழும்பு 7,
2020, பெப்புருவரி 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமாப் பாடநெறி - 2020

**தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்**

1. (i) முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (iii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

   (iv) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

2. முகவரி :
   (i) சொந்த முகவரி :----.
   (ii) உத்தியோகபூர்வ முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் (தனிப்பட்ட) :----.
   தொலைபேசி இலக்கம் (அலுவலக) :----.

3. (i) பிறந்த திகதி :

   ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

   (ii) 2020.03.27 ஆந் திகதியன்று வயது :

   வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

4. இலங்கைப் பிரசையா, இல்லையா என்ற விபரம் :----.

   இலங்கைப் பிரசையாயின் பதிவின் மூலமா அல்லது பரம்பரையினாலா என்ற விபரம் :----------------------------.

5. (i) பால் (ஆண்/பெண்) :----------------------------.
   (ii) திருமணமானவர்/திருமணமாகாதவர் :----------------------------.

6. நீங்கள் தொழில் செய்பவரா, இல்லையா என்ற விபரம் :
   (i) பதவி :----------------------------.
   (ii) சேவைக்காலம் :----------------------------.
   (iii) சேவை நிலையம் :----------------------------.

7. (i) கல்வித் தகைமைகள் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சை :
   வருடம் :----------------------------.

   பரீட்சைச் சுட்டெண் :----------------.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை :
வருடம் :----------------.

பரீட்சைச் சுட்டெண் :----------------.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |

(iii) வேறு கல்வித் தகைமைகள் (உயர் பரீட்சைகள்/பட்டம்) :----.
வருடம் :----------------------------.

பரீட்சைச் சுட்டெண் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |

8. விளையாட்டுத் திறமைகள் (பெற்றுள்ள உயர் விளையாட்டுச் சான்றிதழ்கள் மற்றும் விசேட ஆற்றுகைகள் பற்றி இங்கு குறிப்பிடவும். சகல சான்றிதழ்களினதும் நிழற்படப்பிரதிகளை இணைத்து அனுப்பவும்) :

(i) தேசிய விளையாட்டுப் பெருவிழா அடைவுகள் (மாவட்ட/ மாகாண/ தேசிய) :--------------------------------.
(ii) தேசிய சங்கங்களின் மூலம் நடாத்தப்படும் தேசிய மட்டப் போட்டிகளில் அடைவுகள் :------------------------.
(iii) சர்வதேச போட்டி தொடர்பான பங்குபற்றுதல்கள் :-----------------------------------------------------------.

9. (i) வர்த்தமானி அறிவித்தலின் 1.1 பந்தியில் உள்ளவாறு எந்தப் பிரிவின்கீழ் விண்ணப்பிக்கின்றீர் என்பதனைக் குறிப்பிடுக:

| அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள அப்பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு பெற்றுள்ள தகைமைகள் தொடர்பான விபரங்கள் :
------------------------------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------------------.

10. வேறு விடயங்கள் :------------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------------------.

11. இந்தப் பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறிக் கட்டணமான 60,000 ரூபாவைச் செலுத்துவதற்கு நீங்கள் தயாரா என்பது பற்றிய விபரம் :----.

இங்கு மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் உறுதிமொழிகின்றேன். மேற்படி தகவல்கள் உண்மையற்றது என யாதேனும் விதத்தில் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் இப்பாடநெறியைக் கற்பதற்குத் தகுதியற்றவராவதுடன் பயிற்சிப் பாடநெறியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

-------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனச் சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டும்**

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்,

இவ் -------------- இல் -------------- ஆகக் கடமையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ------------- அவர்களது விண்ணப்பப் படிவத்தைச் சிபாரிசு செய்து சமர்ப்பிப்பதுடன், இவ்விண்ணப்பதாரி மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறி நடைபெறும் காலத்திற்கு அவரை பணியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

பதவி முத்திரை :

---------------------,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.

திகதி :----.

02-686

---

**சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சு**

மாணவ தாதியர், பயிற்சிகளுக்கான ஆட்சேர்ப்பு - 2019 ஆம் ஆண்டு

சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமை கொண்டுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

| சேவை | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சிக் காலம் | பயிற்சியை தொடர வேண்டிய மொழி |
|---|---|---|---|
| தாதி | தாதி உத்தியோகத்தர் | 03 வருடங்கள் | ஆங்கிலம் |

அட்டவணை இலக்கம் 01

*02.* **கல்வி மற்றும் பதவிக்கு உரித்தான ஏனைய விஷேட தகைமைகள் :**

| க.பொ.த. (சா.த.) தகைமை | க.பொ.த. (உ.த.) தகைமை | பயிற்சிக்கான பிற விஷேட தகைமைகள் |
|---|---|---|
| சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க.பொ.த.(சாதாரண) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். | 2017 மற்றும் 2018 ஆகிய வருடங் களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ.த. (உ.தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பிரிவிற்குரிய உயிரியல், இரசாயனவியல், விவசாயவியல், பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த)<br><br>அல்லது<br><br>2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் ஒரே அமர்வில் க. பொ. த. (உ. தர) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானத் துறைக் குரிய இணைந்த கணிதம், இரசாயன வியல், பௌதீகவியல் மற்றும் உயர் கணிதம் ஆகிய பாடங்களில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் (பொது அறிவுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) | 2020.03.31 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 28 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>உயரம் 04 அடி 10 அங்குலத்திற்கு (147.3 cm) குறையாதிருத்தல்.<br><br>திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.<br><br>ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும். |

*3.* **மாணவ தாதி பயிற்சிக்கான விசேட விடயங்கள் :**

3.1. மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு 2013.11.19 ஆந் திகதிய 1837/8 எனும் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை தாதியர் சேவைக்கான சேவைப்பிரமானக் குறிப்பு மற்றும் அதனுடன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு அமைய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடம் மேற்கொள்ளப்படும். (ஆண் விண்ணப்பதாரிகளின் ஆட்சேர்ப்பானது, தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் நியதிகளின் கீழ் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தேவையினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும்.)

3.2. நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட த்திலும் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு சனத்தொகையின் விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

3.3. அதன் பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை உரிய மாவட்டத்தில் ஒவ்வொரு வருடத்திலும் விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொரு வருடமும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

3.4. அதன்பின்னர் அந்த ஒவ்வொரு வருடத்திலும் ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய எண்ணிக்கை அவ்வருடத்தில் உயிரியல் மற்றும் பௌதீக விஞ்ஞானம் பாடத்துறைகளின் கீழ் தாதியர் சேவைக்கு விண்ணப்பித்த குறைந்த கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மொத்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொரு வருடமும் உரிய பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

3.5. அவ்வாறு ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்பட்டு அவ்வெண்ணிக்கையில் 5% ஆண் விண்ணப்பதாரிகளையும், 95% பெண்

விண்ணப்பதாரிகளையும் உள்ளடக்கியதாக ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் மாவட்டத்தின் அதிகூடிய Z புள்ளிகள் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளில் இருந்து பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படும்.

4. **பொதுவான விடயங்கள் :**

4.1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

4.2 சகல விண்ணப்பதாரிகளும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடற்தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

4.3. பதவிக்குரிய கடமைகளை செய்வதற்கு போதியளவு உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்;

4.4. விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;

4.5. சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்;

4.6. பயிற்சியின் பின்னர் மத்திய அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் கிடைத்தால் நீங்கள் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் சேவையாற்றுவதற்கு விருப்பப்படல் வேண்டும்.

4.7. தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்ப முடிவுத் திகதியான 2020.03.31 ஆந் திகதிக்கு கிட்டிய 03 வருடங்கள் தொடர்ந்து வசித்து இருக்க வேண்டும். தமது வதிவை உறுதிப்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு**.- யாரேனுமோர் விண்ணப்பதாரியின் தகப்பன் அல்லது தாய் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில் இடமாற்றம் பெறக்கூடிய சேவையிலுள்ள காரணத்தால் அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணங்களினால் விண்ணப்பதாரியொருவருக்கு கிட்டிய 03 வருட வதிவை உறுதி செய்யமுடியாத சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அது தொடர்பான இறுதித்தீர்மானம் சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும்.

4.8 ஒரு மாவட்டத்தில் மேற்குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை அம்மாவட்டத்தில் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளை கொண்டு நிரப்ப முடியாத சந்தர்ப்பத்தில் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கையை நாட்டின் சகல மாகாணங்களுக்கும் இடையே அந்த மாகாணங்களின் சனத்தொகைக்கு ஏற்ப மீண்டும் பகிர்ந்தளிக்கப்படும்.

5. **ஏனைய விடயங்கள்**.-

5.1. இப்பாடநெறி முழுநேர பாடநெறியாகும். எனவே ஐந்து வார நாட்கள் மற்றும் சனிக்கிழமை முற்பகலில், பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் கீழ் அல்லது அரசாங்க நிறுவனம் ஒன்றில் வேறு ஏதாவது நிறுவனமொன்றில் முழுநேர கற்கை நெறியை தொடரும் மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியாது. யாரொருவர் இதற்காக விண்ணப்பித்து பின்னர் ஏதாவது சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அவரை கற்கை நெறியில்/பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசினால் அவருக்காக செலவிட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும். பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு அரசாங்க நிறுவனமொன்றில் முழு நேர கற்கை நெறியைத் தொடரும் ஒருவர் இதற்காக விண்ணப்பிக்க விரும்பினால் பின்வரும் முறைகளைப் பின்பற்றப்படல் வேண்டும். (5.2)

5.2 நீங்கள் ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு அரசாங்க நிறுவனமொன்றில் முழு நேர கற்கை நெறிக்காக பதிவு செய்திருப்பின் அல்லது பதிவுசெய்ய இருப்பின் இப்பயிற்சிக்காக இணைய முன்னர் அப்பதிவை இரத்துச் செய்து கொள்ள வேண்டும். நீங்கள் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்டு விரிவுரைகளுக்குச் செல்லாது இருப்பினும் நீங்கள் பல்கலைக்கழக மாணவராகவே கருதப்படுவீர்கள் என்பதால் அவ்வாறான விண்ணப்பதாரர்கள் தமது பெயரை பதிவில் இருந்து நீக்கிக்கொள்ள வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் அதை உறுதி செய்வதற்கும் போதுமான ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

5.3. நீங்கள் யாதேனுமோர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பின் அந்தப் பட்டம் செல்லுபடியாகும் திகதி (Effective Date) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் குறித்த திகதிக்கு முந்திய திகதியாக இருக்க வேண்டும்.

5.4 2020.03.31 ஆந் திகதிக்கு பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் கீழ் நடாத்தப்படும் கற்கை நெறிகளிலோ பதிவு செய்யாதவராக இல்லாதிருப்பினும், ஏதாவது காரணத்தால் மேற்படி பயிற்சிப் பயிலுநர் பதிவு செய்யும் திகதியாகும் போது பதிவு செய்திருப்பின் அவர்களும்

மேற்படி பயிற்சிக்கான பதிவை மேற்கொள்ள முன்னர் அந்த கற்கை நெறியின் பதிவை இரத்துச் செய்து கொள்ள வேண்டும்.

5.5 சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் நடாத்தப்படும் முழு நேர பயிற்சி நெறியில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரியாயின், அவர்களும் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டால் அதுவரை பெற்றுக்கொண்டிருந்த பயிற்சிக்காக கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் குறிப்பிடப்பட்டுள்ள நிதி மற்றும் அதுவரையிலும் பெற்றுக்கொண்ட சகல கொடுப்பனவுகள் என்பவற்றை செலுத்தி உரிய பயிற்சியிலிருந்து நீங்கிக் கொண்டால் மாத்திரமே மேற்படி பயிற்சிக்காக பதிவுசெய்யப்படுவர்.

5.6 மேற்படி சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருப்பினும் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் கற்கை நெறிக்கு இணைத்துக்கொள்ளப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற்கொள்ளல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருப்பினும் நீங்கள் போதியளவு Z புள்ளிகளை பெறாதவிடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திராவிடின், எவ்விதத்திலும் இப்பயிற்சிக்கு தகுதியற்றவராக கருதப்படுவர்.

5.7 கல்வித்தகைமைகள் மற்றும் ஏனைய சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித்திகதியான 2020.03.31 ஆந் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.**-

6.1. மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும். அதற்காக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் உரிய பகுதியில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் அந்த இணையத்தள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6.2. விண்ணப்பதாரி ரூபா 500 பணத்தை இலங்கை வங்கி, தப்ரபேன், இல. 7041318 சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பரீட்சைக் கட்டணம் அறவிடல் எனும் கணக்கிற்கு எந்தவொரு வங்கியிலும், செலுத்துதல் வேண்டும். இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் திருப்பித்தர மாட்டாது என்பதுடன் பிறிதொரு பரீட்சையொன்றுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

6.3. இவ்வாறு தங்களினால் வெற்றிகரமாக பதிவேற்றப்பட்ட (UPLOAD) விண்ணப்பத்தின் பிரதியை தபாலில் இவ்வமைச்சிற்கு அனுப்பவேண்டியதில்லை. ஆனாலும் விண்ணப்பம் பதிவேற்றம் செய்த பின்னர் கிடைக்கப்பெறும் 5 இலக்கங்களைக் கொண்ட குறியீட்டு இலக்கத்தை அச்சுப் பிரதிகளை பின்னர் பெற்றுக்கொள்ளும் வசதிக்காக பாதுகாப்பாக வைத்திருக்கவும். அத்துடன் அச்சுப் பிரதியொன்றை (PRINT OUT) எடுத்து அதில் உரிய இடத்தில் உங்களது கையொப்பத்தை இட்டு கையொப்பத்தை சான்றுறுதி செய்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் எடுத்துவரல் வேண்டும். (7 ஆவது பகுதியை பார்க்கவும்.)

**குறிப்பு** :

விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது உங்களுக்கு ஏதாவது சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 தொடக்கம் 4.15 வரையான காலத்தில் சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரவின் தொலைபேசி இலக்கம் 0112693955 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அது தொடர்பான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

7. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**-

7.1. இலங்கை நிருவாக சேவையில்/ கல்வி சேவையில்/ இலங்கை கணக்காளர் சேவையில்/ அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்த சம்பளம் 512,148 இற்கு குறையாத சம்பளம் பெறுகின்ற நிரந்தர ஓய்வூதியம் உரித்தாகும் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.2. அரசாங்கம் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்கள தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதை கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

7.3. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் மாதிரி விண்ணப்பத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

8. **நேர்முகப்பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள்.-**

8.1. நீங்கள் வெற்றிகரமாக பதிவேற்றிய (UPLOAD) இணையத்தள விண்ணப்பத்திற்கு அமைய குறைந்த கல்வித் தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் Z புள்ளிக்கு அமைய தயாரிக்கப்பட்ட முதன்மைப் பட்டியலொன்றை அடிப்படையாகக்கொண்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், நேர்முக சபையினால் தாதியர் சேவை பிரமாணக்குறிப்பு மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் தாதியர் பதவிக்காக குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் உடற்தகைமைகள் என்பன பரிசீலிக்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போது விண்ணப்பதாரிகளால் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2. இணையத்தளத்தின் ஊடாக பதிவேற்றம் (UPLOAD) செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி (உங்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட).

8.3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

8.4. க.பொ.த (உ.த.) பரீட்சை பெறுபேறு மற்றும் Z புள்ளிகளைக் குறிக்கும் சான்றிதழ் (பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட).

8.5. க.பொ.த (சா.த.) பரீட்சை பெறுபேற்றுச்சான்றிதழ் (பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட).

8.6. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

8.7. வங்கிக்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டு.

8.8. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான பிரதேச செயலாளரின் ஒப்பமிடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவு தொடர்பான சான்றிதழ்.

8.9. விவாகமாகாதவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான சமாதான நீதவான் முன்னிலையில் ரூபா 50.00 முத்திரையில் கையொப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசி.

8.10. பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு அரச/சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் பயிற்சி நெறியொன்றில் பதிவு செய்யவில்லை அல்லது பங்கு பற்றுவதில்லை என்பதற்கான தங்களின் சான்றுறுதிக் கடிதம்.

**குறிப்பு**.- (அ) மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள (8.3) தொடக்கம் (8.7) வரையான ஆவணங்களின் மூலப்பிரதிகளுக்கு மேலதிகமாக தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்படப் பிரதிகள் நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது எடுத்து வருதல் வேண்டும்.

(ஆ) பயிற்சிப் பாடசாலைகளில் காணப்படும் இடவசதிகள் மற்றும் சேவை அவசியத்திற்கு ஏற்ப பயிற்சிக்கு இணைக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பன சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் அனைவரும் பயிற்சிக்கு இணைக்கப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

ஈ. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பான விபரங்கள் http://www.health.gov.lk எனது இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்பட மாட்டாது.

9. **பயிற்சித் திட்டம்**.-

9.1. நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் தாதியர் கற்கை நெறியை தொடர்வதற்கு தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு உள்வாங்கப்படுவர். கற்கை நெறிகள் இலக்கம் I அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளில் கற்றல் வேண்டும்.

9.2. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சிக் கல்லூரிகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

9.3. பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது தமது பயிற்சிக் கல்லூரியின் பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளுக்கு அமையத் தவறும் அல்லது பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளில் ஏதாவது பொய் அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்ட ஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

9.4. பயிற்சிக் காலத்தில் அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் உப ஆவணம் V இன் நியதிகளுக்கு அமைய மாதாந்தக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

9.5. பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்த பட்சம் பத்து வருடங்கள் (10) அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையின் கீழ் தாதியர் பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். மேற்படி (9.3) விடயத்திற்கு அமைய, பயிற்சியின் போது பயிற்சியிலிருந்து விலகினால், பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருட காலம் மேற்படி உரிய பதவியில் சேவையாற்றுவதற்கு தவறினால் பயிற்சிக்காலத்தின் போது அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணைக்குரிய பணம் அவரினால் சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

9.6. இந்த கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் அனுப்பும் திகதிக்கு திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பயிற்சிக் காலத்திலும் திருமணமாகாதிருத்தல் கட்டாயமானதாகும்.

10. **சேவையில் ஈடுபடுத்தும் நியதிகள்**.-

10.1. பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் பொறுப்பேற்காது. ஆனாலும் பயிற்சிக்கு இணைக்கப்பட்ட கற்கை நெறிக்குரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் நிபந்தனைகள் மற்றும் பயிற்சியை நிறைவு செய்யும் தினமாகும் போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய தயாரிக்கப்படும் முன்னுரிமை வெற்றிட பட்டியலுக்கு சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கிய பின்னர் எஞ்சும் வெற்றிடங்களுக்கு பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து இறுதிப்பரீட்சையில் சித்தியடையும் பயிலுனர்களின் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை திறமையை கருத்திற்கொண்டு உரிய பதவியின் III ஆம் தரத்தின் பதவிக்கு நியமிப்பது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு கட்டுப்படல் வேண்டும்.

10.2. பயிற்சியின் நிறைவில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டால் பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

10.3. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கப்பட வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபனமாகினால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவாறு கருப்புப்பட்டியலில் அவருடைய

பெயர் சேர்க்கப்படும். பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்த பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10.4. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என காணப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு தகுதியற்றவராக கருதப்படும்.

10.5. மேற்படி இணைத்துக்கொள்ளப்பட்ட சகல உத்தியோகத்தர்களும் அரசாங்க சேவைக்குரிய சட்ட திட்டங்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் சட்ட திட்டங்கள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும் கொள்கைகளுக்கும், அரசாங்க நிதிப்பிரமானத்திற்கும், அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் மற்றும் அவற்றுடன் தொடர்பாக அரசினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் நியதிகள் மற்றும் திருத்தங்கள் என்பவற்றுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

10.6. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிக் கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குதல் சம்பந்தமாக இவ் அமைச்சு பொறுப்புக் கூறாது. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தங்குமிட அறைக்கான வாடகை, நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் அறவிடப்படும்.

10.7. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உரிமை இல்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரியவரின் பயிற்சியிலிருந்து நீக்குதல் அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

10.8. பயிற்சிக்கு இணைத்தல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள் வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே முரண்பாடுகள் ஏற்பட்டால், சிங்கள மொழியே சரியானதாக கருதப்படும்.

பத்ரானி ஜயவர்தன,
செயலாளர்,
சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சு.

சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு-10,
2020, பெப்புருவரி 18.

02-693

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.